பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா
வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா ஒன் றுக்கு | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா | ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு | ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

இதழ் 4 | ஈரோடு, விபவ ஹு கார்த்திகைமீ 10உ (25—11—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 31

நிமிஷக்கணக்கில் குணம் அடைவதை விட்டு என் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய். ஆச்சர்யநிவர்த்தி!!

## சுவாசகாச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர்.

நீண்டகால சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, தொண்டை இவைகளில் உண்டாகும் சகலவித கஷ்டங்களையும் நமது ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், தாராளமால் பேசும்படியாயும், பசிதீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0. உள்நாட்டுக்கு தபால் செலவு 0—4—0. பு. மா. சொக்கலிங்க முதலியார், புரோப்ரைட்டர்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை, செவ்வாய்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்தநம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.

Use Only Unbreakable Wrought Iron Railings Noted for.




100 வருஷத்துக்கு உத்திரவாதம்-
நம்நாட்டு கைத்தொழிலை ஆதரியுங்கள்.
இரும்பு கிராதிகள் விலை சரசம்.

பால்கனி கட்டிடங்களுக்கு அவசியமான இரும்பு கிராதிகள் அநேக தினுசுகளில் விற்பனைக்கு தயார்செய்து யிருக்கிறோம். இந்த புது தினுசு கிராதிகள் நாகரீகமானதும் கட்டிடங்களுக்கு பார்வை கொடுக்கக்கூடியதும், எந்த விதத்திலும் உடையாமலும் தயார்செய்து ஏராளமாக விற்பனைசெய்துவருகிறோம். கட்டிடங்களுக்கு ஏற்றவாறு எந்த அளவுப்படியும் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கப்படும். உடனே தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய கிராதிகளுக்கு ஆர்டர் செய்யவும். பிரைஸ் லிஸ்ட் இனாம-
தயார் செய்பவர்கள்:—

ஸ்ரீ கிருஷ்ணா இரும்பு தொழிற்சாலை,
மதுரை.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஹு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்.
மைலாப்பூர், மதராஸ்

குளிர்! குளிர்!! குளிர்!!!

## பால கலவா அல்லது கம்பளி குல்லா.



குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருத்தல்வேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும். நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ. 2 குல்லா ரூ. 1—0—0

உடனே எழுதுங்கள்.

கனடியன் வாட்சு பீபிள், ஜார்ஜ் டவுன், மதராஸ்,

## திருப்பூர் பனியன்ஸ்,

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

## 'திராவிடன்'

### இனப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் வெளியூர் உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,, 18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

---


## பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கு, லேபில்களுக்கும், இன்னும் இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கப்படுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பாஸ்டியன் ஸ்டுடியோ
173, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

---

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

## டேபில் டைம்பீஸ் இனாம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபிள் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம், முந்துங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜினேன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

---

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி
மெடல் பெற்ற

### விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் - 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0, நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
வெட்டர்னரி தோட்டம், சேலம்.

---

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

'ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

# அமிர்தகுணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக


(3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு)

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற புதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகையொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜனவினோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆனந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

---




இருபதாம் நூற்றாண்டின் இணையிலா விநோதம்!

## மாரிட்மனி தர்மாமிடர்

அல்லது

## மனோநிலை தர்மாமிடர்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த தர்மாமிடரால் எந்த ஆணுடைய அல்லது பெண்ணுடைய மனோ நிலைமையை உடனே கண்டுபிடித்துவிடலாம். ஒருவர் கோபமாயிருக்கிறாரா அல்லது சந்தோஷமாயிருக்கிறாரா, அல்லது திருப்தியுடனிருக்கிறாரா, காதலிக்கிறாரா இல்லையா, எதுவாயிருந்தாலும் இதன் உதவியால் கண்டுகொள்ளமுடியும். சிறப்பாக காதலர்களுக்கு இது நல்ல பயன்படும். இக்கருவி இந்தியாவுக்கே புதிதாகும்.

விலை ரூபாய் 1—4—0

ஏககாலத்தில் உள்நாட்டிலிருந்து இரண்டு தர்மாமிடர்கள் தருவிப்போருக்கு தபால்செலவில்லை. இந்தியா, பர்மா, சிலோன், தவிர மற்றைய நாட்டாரும் தபால் செலவுடன் முன்பணம் அனுப்பவேண்டும். உடனே எழுதுங்கள்

தி கிருஷ்ணா ஏஜன்ஸி, தபால் பெட்டி 119, மதராஸ்.

---

## ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வாராது. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை ,, 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I. R

# பண்டிதர்களுக்குப் பகை அவர்கள் படிப்பேயன்றி "குடி அரசு" அல்ல.

கைவல்ய சாமியார் எழுதுவது.

எங்களுக்குப் பண்டிதர்களிடம் பகையில்லை, பண்டிதர்களெல்லாம் எங்கள் உறவின் முறையார் என்பதை நாங்கள் எப்பொழுதும் மறக்க மாட்டோம். செத்துப்போன, செத்துப் போகும், புராணப் போர்வையைக்கழட்டி எரிந்துவிட்டு உயிருள்ளதை ஜனசமூகத்திற்கு உதவுங்கள் என்றே சொல்லுகிறோம். நாலு பணத்தோடும் ஒரு வேளைச் சோற்றோடும் வைதீகம்போனாலும் அது பின்னும் வந்து சனசமூகங்களை வாதிப்பதற்கு இந்த பண்டிதர்கள் பரப்பும் பழைய புராணமும் இவர்கள் பாடும் பாட்டுமே அதற்குப் பக்கத்துணை: பண்டிதர்கள் போட்ட சண்டையினால் பேராசையும் விரோதமும் சேர்ந்து மனுஷிய ஜீவனை ஒரு மூலையில் ஒதுக்கி விட்டது. அதனால் மனித இயல்பான இசைதவறிவிட்டது. அதனால் நம் சரித்திரம் அழிவை நோக்கிப் புறப்பட்டு, பஞ்சமென்னும் ரதத்துக்கு முன்னே கழுகுக் கொடியும் அதிவேசத்துடன் செல்லுகிறது. உயிரும் அழகும் கொண்ட நம் நாட்டை சமயக் கொடுமை அழித்து விட்டது. அதன் ஆதரவால் உண்டான ஜாதிக் கொடுமை உயிருள்ள ஜனத்தை எல்லாம் அழிக்கிறது, ஜாதியின் திறமையை வளர்ப்பதாகிய கல்நெஞ்சு சம்பிரதாயமே பண்டிதப் படிப்பாயிருக்கிறது. சமயக்கட்டிட மெல்லாம் ஆத்மார்த்த பரலோகத்திற்கே அமைக்கப் பட்டவைகள் என்கிறார்கள். ஆனால் இவர்கள் வயிறு வளர்ப்பது கொலைக்கூட்டத்தில ஒரு இடமாகவிருக்கிறது, குளோபார மென்னும் மயக்க மருந்தைக் காட்டி திருடும் திருடன் தேகத்தை மயக்கி ஸ்மரணை அற்றபின் பொருளைக் கொண்டு போகிறான், சமய வாதிகளோ மோக்ஷலோகத்தின் சாஸ்திரங்களைக்காட்டி சிந்தனை சக்திக்குப் பக்கத்திலிருக்கும் பகுத்தறிவை மயக்கி பொருளைக் கொண்டு போகிறார்கள். பொருள் வேறு வழியில் செலவானதினால் உண்டான களைப்பும், சொர்க்கம் வந்து விடுமென்கிற நம்பிக்கையும், தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் வேண்டிய கடமைகளைச் செய்யத் தடையாய் விடுகிறது. இந்தத் தடைகளைக் காட்டில் குடிகொண்டு போனதினால்தான் கோவிலுக்கு மண்டபம் கட்டளையும் நக்ஷத்திர அர்ச்சனையும் செய்ய வழக்கப்பட்டிருக்கிறார்களேயல்லாமல், தனக்கே ஊழியம் செய்து தான் நோய் வாய்ப்பட்டுக்கிடக்கையிலும் உழைத்து உயிர்போகையில் தண்ணீரும் ஊற்றும் வேலைக்காரனுக்கு காலணா கூடக் கொடுக்காத பாவம் நம்நாட்டில் வளர்ந்து விட்டது. இந்த தருமம் நம் நாட்டிலில்லாமல் போனதினாலே வேதமும், ஆகமமும், துவைதமும், விசிஷ்டாத்துவைதமும், இதைச் சம்மந்தித்த அநேக சாமிகளும் சாஸ்திர வாதிகளும், சமயப் பண்டிதர்களுமிருந்தும் பட்டிகைக்கு அடிக்கும் ஆணிகூட பக்கத்தாரானிடம் வாங்குகிறோம்.

பண்டிதர்களே நமது ஜீவனத்துக்கவசியமானவை பல நூற்றாண்டு வருத்துடன் தேர்ந்தெடுத்து விளைவித்த பயன்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் பயிராக மாற்ற முடியாத களைகளை யோசனைதுக்களையாமல் களைகள் காடாரம்பமாய் வளர்ந்து கவனக்குறைவினால் பயிரைக் கெடுத்து பழைய காட்டு நிலைக்கே கொண்டு போகிறதே. அதுபோல் பூமிக்குத் தயவுடன் தன்னை இசைத்துக் கொணடதாகிய கடவுள் தன்மையை முற்காலத்தில் வளரவிட்டதுபோல் வளரவிடாமல் பாழ்படுத்தும் இதிகாச புராணக் கதைகளை எடுத்தெறிந்து விடுங்களென்றே "குடி அரசு" சொல்லுகிறது.

பார்ப்பனரைக்குற்றம் சொல்லுகையில் எல்லாரும் சேர்ந்து தலையசைக்கிறார்களென்று முன்னே சொன்னோம். பாப்பாரை எதனால் குற்றம் சொல்லுகிறோமோ அந்தக் குற்றங்களையே சில சைவர்களும், பண்டிதர்களும் தலையிலேற்றி வைத்துக் கொள்ளலாமா? அக்குற்றத்திலிருந்து விலக வேண்டாமா? விலகச்சொல்லுகையில் நீங்கள்செய்யும் குற்றத்திற்கு ஆதாரமாக இருக்கும் சாஸ்திரங்களை எடுத்துச் சொல்லாமலிருப்பது எப்படி? சாஸ்திரத்தைச் சொல்லுகையில் அதற்குள் பொதிந்து கிடக்கும் சாமியை ஒரு புரட்டா வது புரட்டிப்பார்க்காவிட்டால் அதனடியில்இருப்பது எப்படி யெல்லாரும் அறிவார்கள்? பார்வைக்குப் பலமுள்ளதைபோல் தோன்றும் காரணத்தால் அதற்கு அதாத்தியமாகிய பழய காலத்து மதநம்பிக்கைகள் தற்காலபௌதிகவிஞ்ஞான சாஸதிரப்பிரகாசத்தின் வன்மையால் கீர்த்துளியாய் வருகின்றமையால் தம் தம் கொள்கைகளே உண்மையெனச் சாற்றிவந்த சமயவாதிகளின் சகுதிவாதங்கள் தெளிந்த புத்தியுடையவர்களால் ஒரு சார் ஒதுக்கப்படுவதும் கண்கூடாககண்டு வருகையில் பிள்ளையை அறுத்த கதையும் சைவப் பாப்பானுக்கு பெண்ஜாதியைக் கொடுத்த கதையுமான ஆபாசக் கோட்பாடுகள் மொத்துண்டு மடியாதா? நம பண்டிதர்கள் கொண்ட மயக்கை நீக்கி, மனத்தை விரிவுறச் செய்து, மேன்மைப்படுத்திக் கற்றோர் சித்தத்தை அடிமை கொள்ளும் எங்கும் நிறையும் மங்கள சிவத்தை சொல்லுங்கள். இக்காலத்தில் செய்யப்படும் தத்துவ ஆராய்ச்சி யென்னும் சம்மட்டி அடிகளால்மொத்துண்டு மண்பாண்டங்களைப்போல் படுசூரணமாய், தொட்டால் சாவதும கிட்ட நெருங்கினால் ஒடுவதுமான சிவத்தைச் சொல்லாதீர்களென்றே "குடி அரசு" சொல்லுகிறது.

தெய்வவிரோதமான உங்களுடைய குருட்டுக் கொள்கையை தைரியமாக எடுத்துச் சொல்லுகிறவர்களைக் கோபிப்பது தரும விரோதம். அதிலும் சிவத்தின் தன்மையை உங்கள் ஜாதிக்குள் அடக்குவது தெய்வவிரோதம். பிர்மாவின் முகத்திலிருந்து பார்ப்பான் பிறந்தான் என்கிறது வேதம். சிவத்தின் முகத்திலிருந்து சைவப்பாப்பான் பிறந்ததாக ஆகமம் சொல்லுகிறது. இவர்கள் இரண்டு பேரும் கடவுள் ஜாதியைச் சேர்ந்தவர்கள். மற்றவர்களெல்லாம் கடவுள் கட்டளைப் பிரகாரம இவர்களின் ஏவல்கேட்டு நடக்கவேண்டியவர்கள். அப்படியே எத்தனை காலம் கடந்தாலும் சூத்திரன் சூத்திரன் தான். இதற்கும் பெரியவர்கள் வாக்கும் கடவுள் கட்டளையுமாம். இப்படி ஒரு கடவுளும் பெரியவர்களும் இருந்தால் அவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்று கேட்கக் கூட அதிகாரமில்லையாம். மற்ற தேசத்துக் கடவுளும் பெரியவர்களும் அவர்கள் தேசத்தில் இந்த கட்டளையை ஏன் வாதிக்கவில்லை என்று நம் கடவுளையும் பெரியவர்களையும் கேட்க கற்றுக் கொடுத்து அதிகாரமும் எடுத்துக் கொள்ள இப்பொழுது வந்திருக்கும் அறிவு சொல்லுகிறதே. மற்ற தேசத்துப்பண்டிதர்கள் சொன்ன நீதிவாக்கியங்களை நம் பண்டிதர்கள் சொல்லும் விஷயங்களுக்கும் பிரமாணம் காட்டினால்தான் நம் பண்டிதர்களின் திறமையை மற்றெல்லாரும் பாராட்டுவார்களென்று பண்டிதர்கள் ஏன் நினைக்கிறார்கள், இப்பொழுது வந்திருக்கும் அறிவினாலல்லவா?

சில சைவப் பணக் காரர்களுக்கு ஸத்சூத்திரர் என்கின்ற பட்டமும் உண்டு. அதே போலநாமும் ஸத்சூத்திரர் தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிற பண்டிதர்களும் திருப்தியடைகிறார்கள். சூத்திரன் என்பதின் அர்த்தமே பல பண்டிதர்களுக்குத் தெரியாமலிருக்கையில் ஸத்சூத்திரன் என்பதின் அருத்தம் எப்படித்தெரியும்? ஸத் என்னும் பதத்திலேயே தன்னை விசேடமாகமதித்து அசல் சூத்திரன் என்று சொல்லப்பட்டவர்களை விட ஒருபடி உயர்ந்த ஜாதியென்று நினைத்துக் கொண்டார்கள். பாப்பானை விட ஸத்சூத்திரன் பாராட்டும் ஜாதி உயர்வும், நடிக்கும் நடனமும், சாப்பிடும் மதையும், பாப்பான் வீட்டிலேதான் சாப்பிடுவேன் என்னும் மேன்மையும், நந்திக்குப் பின் புறத்திலிருந்து ஸத்சூத்திரனும், அதற்குப் பின் அஸத் சூத்திரனும், இரண்டாவது பிரகாரமாகிய அந்தர் ஹாரததில் அனுலோமனும், மத்திய ஹாரமென்னும் பிரகாரம்த்வஜதண்டத்திற்கு வெளியில் பிரதிலோமனும் நின்று தரிசித்தல் வேண்டுமென்ற ஆகம விதியின் பெருமைகளும், இப்பொழுது "குடி அரசு"வாயில் முணுமுணுப்பவர்களும், மனதில் குற்றமாக நினைப்பவர்களும் அஸத்சூத்திரர்களிலிருந்து ஸத்சூத்திரர்களுக்கு உயர்த்தப் பட்டவர்களென்று நினைக்கிறேன்,

இந்த உயர்வு கொடுப்பதற்கு சிறிது பணக்காரனைக்கண்டால் பல்லைக் காட்டும் குருக்கள் கட்டுப்பாடோ சமயக் கட்டுப்பாடோ காமறியோம். சத்சூத்திரன் என்பதின் அர்த்தம் தெரிந்தநம் பெரிய பண்டிதர் சுவாமி வேதாசலம் சத் சூத்திரனென்றால், அடைந்து உருட்டித் திரட்டின நல்ல அடிமை, ஆசாரமும் ஒழுக்கமுமில்லாத நல்லவன், என்று சைவவேளாளர்களையும் பண்டிதர்களையும் சொல்லுவது அனியாயம். வேளாண்மைத்தொழில் வேதத்தில் விதித்திருக்கிறது. வேளாளர்கள் வைசியன் என்றாவது ஒத்துக்கொள்ளுவதற்கு ஒரு புஸ்தகமும் எழுதினர். துவார் என்னும் ஊரில் பாப்பார்கள் சபை கூட்டி "பிராமணன் சூத்திரன் என்னும் இரண்டு ஜாதிதான் இப்பொழுதிருக்கிறது. சத்திரியன் வைசியன் என்னும் ஜாதியே கலியுகததில் கிடையாது" என்று தீர்மானம் பண்ணிவிட்டார்கள். எதற்கும் அகச்சான்று வேண்டுமென்கிற பண்டிதர்களும் ஆராய்ச்சிப் பண்டிதர்களும் ஆசாரப் பண்டிதர்களும் எங்கே? அநேக நூற்றாண்டு காலமாக இந்தப் பழிச் சுமையைத் தாங்கியிருந்தும் காலம் வந்தபொழுது எழுந்து வேலை செய்ய புராணச் சுமையைக் கீழே இறக்கிவைத்துவிட்டதாக பண்டிதர்களைக்காணோம். மேனாட்டார்கள் அவர்கள் பைபிள் சொல்லுவதுபோல தங்களைப் பாவிகளென்று நினைத்துக்கொண்டால் இவ்வளவு உன்னதஸ்திதிக்கு வருவார்களாவென்பதை ஆங்கிலம் படித்த பண்டிதன் கூட நினைப்பதில்லை. எவனாவது பாடுபட்டுப் பழியை ஏற்று ஒரு பதவிக்கு வந்தால் "எனக்கொருவேலை, என் பெண்ஜாதியின் தம்பிக்கு ஒரு வேலை" என்று வந்து விடுகிறான். வாங்கிக்கொள்ளுகிறான். பாடுபடும் பத்திரிகைகளுக்கு காலணா செலவழிப்பதில்லை. அவன் சொல்லும் குற்றம்தான் பெரிதாகவிருக்கிறது.

இத்தனை பழியையும் தலையிலேற்று, பணத்தையும் தேகத்தையும் செலவு செய்து, எந்தப் பக்கத்திலும் உஜ்ஜீவனசக்தி பாவித் தழைத்து வரும் இந்தக் காலத்தில் நாமும் மனிதனோடு மனிதனாயிருக்கத் தடையாகவிருக்கும் சமயக் கொடுமைகளால் சமூகம் ஏழையாகி பாடுபட்டுத் தேடும் பொருளெல்லாம் பரலோகத்திற்கே செலவு செய்தால இகலோகம் எங்கி நிற்குமே என்று "குடி அரசு" சொன்னால் "அது கடவுளைக் குற்றம் சொல்லுகிறது, சமயத்தை ஒழிக்க வந்திருக்கிறது" என்று பார்ப்பான் சொல்லுவதற்குமுன் ஒரு படி தாண்டி வருத்தப்படுகிறீர்களே! நீங்கள் எவ்வளவு சிவபக்தியில் சிறந்தவர்களானாலும் அப்பர் சுவாமிகளைவிடஉயரமுடியுமா? அவர் கண்ணுக்குக் கூட சிவபெருமான் தெரியா

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

### கட்டுரை 6

**திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்**

இராமன் காடேகவும் பரதன் நாடாளவும் கூறிய கைகேசியின் பேச்சுக் காதில் விழுந்த மாத்திரத்தில் தசரதன் மிகவும் கலங்கினான். அது கனவோ நனவோ என ஐயுற்றான். தனக்குத் பித்தேறியதோ என எண்ணிக் கொஞ்சம் தெளிந்து கொடுங்கோபத்துடனே கைகேசியை எரிக்கிறவன்போலப் பார்த்து "அடி கெட்டவளே! நானாவது ராமனாவது உனக்குச்செய்த தீமை உளவோ? எல்லாரும் இராமனைப் புகழ்கின்றார்களே. என்னிடம் அளவற்ற அன்பை வைத்திருக்கும் அவனை எவ்வாறு பிரிவேன். அவனைப்பார்க்கப்பார்க்க எனக்கு ஆசை வளர்கிறது- அவனை ஒரு கணம் பார்க்காமலிருந்தாலும் என்னுயிர் போய்விடும்- அவனில்லாமல் என்னுடலில் உயிர் நிற்காது. தீயவளே! பிடிவாதத்தை விடு. என் தலையில் உன் அடிகளை தொட்டுவேண்டுகிறேன். இதுவரை அவனை நல்லவனென்றாயே. இது என்னை மகிழச்செய்வதற்கா? அல்லது அவன் உனக்குப் பணிவிடை செய்ததற்கா? உனக்கு யார் இக்கெட்ட புத்தியைச் சொன்னது? இராமன் மிக்க செல்வமாக வளர்ந்தான். அவனைக்காட்டுக்கு அனுப்ப உன் மனம் எப்படி துணிந்தது? அவன் எல்லோருக்கும் பிரியமானவனாயிற்றே உலகம் சம்மதிக்குமோ? அவன் உனக்குப்பணிவிடை செய்வதில் கொஞ்சமாவது தவறவில்லையே- பரதனைக் காட்டிலும் அவன் உனக்கு சிறந்த பணிவிடை செய்கிறானல்லவா? அப்படியிருக்க பரதனிடத்தில் என்ன சிறப்பைக் கண்டாய்! மனிதரிற் சிறந்தவனான இராமனைக்காட்டிலும் அதிகமாக உனக்கு ஊழியஞ் செய்கிறவர்கள் யார்? உன்னிடத்தில் அதிக மரியாதையையும் வணக்கத்தையும் வைத்து உன் சொற்படி நடக்கிறவர்கள் இராமனைத் தவிர யார்? அப்படியிருக்க அவனைக் காட்டிற்குத் துரத்த எப்படி உன்மனம் துணிந்தது? அவன் தன் பணியிலும் கொடையிலும் எல்லோரையும் வசப்படுத்துகிறான்- அவன் எல்லோருடைய மனம் போலவும் நடப்பவனாயிற்றே- கைகேசி! எனக்கோ வயதாய் விட்டது, நெடுநாள் பிழைத்திருக்கமாட்டேன்- கிழவனானால் சொன்னதையே சொல்லிக்கொண்டிருப்பவன்- ஆகையால் என்னிடத்தில் இரக்கம் வை, நீ எனக்கு வயதிற்சிறியவளாக இருந்தாலும் உன் கால்களைத் தொட்டுக் கை கூப்பி வேண்டுகிறேன்- நான் இராமனுக்குச் சொன்ன சொல்லை தவறும்படி செய்யாதே" என்று வேண்டிக்கொண்டான்-

பின் கொஞ்சநேரம் மூர்ச்சையடைந்து எழுந்து தள்ளாடிப் புலம்பிய தசரதனை நோக்கி கைகேசி "உம்மையொத்த மன்னர் உம்முடைய உயிரைக்காத்த கைகேசிக்கு என்ன உதவி செய்தீரென்று கேட்டால் யாது கூறுவீர்? தன்னுயிரைக் கொடுத்து யார் என்னைக் காப்பாற்றினளோ யாருடைய தயவால் நான் பிழைத்திருக்கிறேனோ—அவளுக்கு அப்போது இரண்டுவரங்கள் கொடுத்து விட்டு இப்போது அவைகளை மறுத்து விட்டேனென்று சொல்வீரோ? சிபி முதலியவர்கள் குலத்திற் பிறந்தவரா நீர்? கெட்ட எண்ணமுள்ளவனே! நீ அதர்மமாக நடந்து இராமனுக்கு முடிசூட்டி கௌசலையோடு சுகமாக வாழ நினைத்துக்கொண்டிருக்கிறாயல்லவா? இராமனுக்கு முடி சூட்டினால் உன்னெதிரிலேயே நஞ்சைக்குடித்து இப்போதே இறப்பேன் கௌசலையைக் காட்டிலும் உனக்கு நானே அதிக சுகத்தைக் கொடுக்கிறவளல்லவா? ஆகலின் கோசலையை எல்லோரும் வணங்குவதை நான் பார்ப்பதைவிட உயிரையே விடுவேன்" என்று கூறினாள்- தசரதன் எவ்வளவு கெஞ்சியும் மறுமொழி கூறவில்லை அவன் கொஞ்சநேரம் அவளை இமைகொட்டாமற் பார்த்திருந்து 'இராமா' என்று கூவிக் கீழே விழுந்தான்.

பின் அவன் வணக்கமாய் "பெண்ணே! உன்னை சிறு பெண்ணாக மணந்தேன்- அப்போது உன் கெட்ட குணத்தை அறிய முடியவில்லை- இப்போது வயதான பிறகு உன் தீய குணம் வெளியாகிறது- குடிகளுடைய கோபத்தைத் தேடாதே. பரதன் மிகவும் நல்லவனல்லவா- ஆகலின் அவன் இராமனிருந்தாலே நாட்டிலிருப்பான். என்னுடைய நான்கு பிள்ளைகளுக்கும் இந்த நாட்டை சமமாகப் பிரித்துக்கொடுக்கிறேன், அல்லது பரதனுக்கு முடி சூட்டுகிறேன். இராமன் மாத்திரம் வயதான என்னருகிலிருக்கும்படி செய். பல நாளாகச் சிந்தித்துச் செய்த இத்தீர்மானத்தை இப்படிக் கெடுக்கலாமா? பலருக்கு முன்பாக இராமனுக்கு முடி சூட்டு நாளை என்ற என் வாக்குப் பொய்யாகுமே! கோசலை மிகவும் உத்தமி. அவள் முன் என்ன சொல்லுவேன்? உனக்காக அவளைச் சரியாக நான் நடத்த வில்லை. எத்தனையோ உபகாரம் செய்த எனக்கு இத்தீமை நினைத்தாயே- இராமனைத் துரத்துவதை யறிந்தால் சுமித்திரை தன் மக்களை எப்போது துரத்தி விடுவோனோ என்று என்னை கொஞ்சமும் நம்புவாளா? சீதை இறப்பாளே. நானும் சாவேன். நீ விதவையாக உன் மகனோடு இந்நாட்டை ஆளப்போகிறாயா? நெடு நாளைக்கு முன் செய்து தந்த வாக்குறுதி இப்போது எனக்கே கேடாய் வந்ததே! ஒரு பெண்ணின் பிரியத்தைச் சம்பாதிக்க அரசன் தன் மகனைக் காட்டிற்குத் துரத்துவானா என்று எல்லோரும் என்னை இகழ்வார்களே- இராமன் இக்கட்டளையை மீறிக் காட்டுக்குப்போகேனென்றால், அது அதர்மமாகத் தோன்றினாலும் எனக்கு மிகுந்த பிரியத்தை உண்டாக்கும்- இராமன் அப்படிச் செய்யமாட்டானே; இராமனைக் காட்டிற்கனுப்புவது பரதனுக்குப் பிரியமானால், நான் இறந்த பிறகு அந்தப்பாவி உத்தரக்கிரியைகளைச் செய்ய வேண்டாம் ஐயோ! இராமன் காட்டில் என்னென்ன துன்படைவானோ இராமன் காடேகவும் பரதன் நாடாளவும் இந்த எண்ணம் எவருக்குத் தோன்றிற்று. இக்கொடிய சூழ்ச்சியை யார் உற்பத்தி செய்தார்கள் பெண்களையெல்லாம் சுட வேண்டும். ஐயோ ஒரு பெண்ணுக்காக பெண்களெல்லாரையும் நிந்தித்தேனே! இராமன் இயற்கையிலேயே மிகவும் அழகுள்ளவன்; பல அணிகளால் அவ்வழகு இன்னும் வளரும். அவனைக்கண் குளிரப் பார்க்க வேண்டும். அவன் காட்டிற்குப்போனால் நான் இறப்பது நிச்சயம். தீயவளே இவ்வளவு கொடுமையாகப் பேசிய உன் பற்கள் தூள் தூளாக உதிரவில்லையே! செத்தாலும் சரி, நீ ஆயிரஞ்சுக்கல்களாக வெடித்து மண்ணோடுமண்ணானாலும் சரி, எனக்கு நன்மைதராத அந்தக்காரியத்தை உன்பேச்சைக் கேட்டுநான் செய்யவேமாட்டேன், உனக்குச் சாவு வரக்காணேனே. ஐயோ! உன் கால்களைப்பிடித்து வணங்குகிறேன். தயவு செய்' "என்று பிதற்றி காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் கைகேசியின் பாதங்களைப் பிடிக்கக் கீழே குனிந்து வேரற்றமரம்போல் அவைகளைத் தொடமுடியாமல் கீழே விழுந்தான்.

கைகேசி திரும்பவும் அவனைப் பார்த்து "நீ மிகவும் யோக்யனைப் போலப் பேசிக்கொள்கிறாய். எனக்குக்கொடுத்திருக்கிற இரண்டுவரங்களுக்கு என்னிடத்தில் என் கடன் பட விரும்புகிறாய்" என்றாள். அதைக்கேட்ட தசரதன் மூர்ச்சையடைந்தான.

பின் அவன் தெளிந்து கடுங்கோபத்தோடு "கொடியவளே விண்ணுலகத்தில் தேவர்கள் என்னைப்பார்த்து பெண்ணுக்காக மகனை எப்படிக் காட்டுக்கனுப்பினீரென்று கேட்டால் நான் எப்படி உயிரை வைத்துக்கொள்வேன்? இராமனுக்கு முடிசூட்டுகிறேனென்று கூறியவாக்குப் பொய்யாகுமே. அறுபதாயிரம் ஆண்டுகளுக்கதபால் பெற்றபிள்ளையாயிற்றே. இப்பிடிவாதத்தை விட்டு விடு" என்று புலம்பினான்.

சூரியன் மறைந்தான் இரவு ஆரம்பித்தது. மூன்று யாம நிலவுள்ள அவ்விரவு அவனுக்கு ஒரு யுகம் போலிருந்தது- "இரவே விரைவில் விடியமாட்டாயா" என்று அவன் ஏங்கினான்; பிறகு வேறு கதியில்லையென்று கண்டு கைகுவித்து வணங்கி அவளைச்சமாதானஞ் செய்ய முயன்றான். அவன் "பெண்ணே! நீ நல்லவளாயிற்றே. தயவு செய், நான் உனக்குச் செய்த வாக்குறுதியோ ஒருவருக்கும் தெரியாது. இராமனுக்கே பலரறிய செய்தது. நாளை முடிசூட்டு என்று பலரறியச் சொல்லிவிட்டேன். அது நடைபெறவில்லையென்றால் என்னை எல்லாரும் இகழ்வார்கள். ஆகையால் நீ விட்டுக் கொடுக்கவேண்டும். நான் உனக்குச்சொன்னபடி இந்த நாடு உன்னதே. நீ என்னிடத்திலும் இராமனிடத்திலும் கிருபை செய்து நீ இந்த நாட்டை அவனுக்குத் தானங்கொடு: அதனால் உனக்குமிகவும் புகழுண்டாகும். பருத்த தொடைகளை உடையவளே பரதனும் மகிழ்ச்சியடைவான். அவன் மிகவும் நல்லவனாயிற்றே" என்று வேண்டினான். இவ்வேண்டுதலாலும் கைகேசி மனம் இளகவில்லை. உடனே அவன் மூர்ச்சித்தான். இவ்வாறு அவன் துக்கத்தோடும் அன்றிரவைக் கழித்தான் பொழுதும் விடிந்தது எழுப்ப வந்தவர்களை வேண்டாமென்று தடுத்துவிட்டான்.

கைகேசி அவனைப்பார்த்து "சொன்ன வார்த்தையைத் தாண்டாதேயும்- என் தரையிற்கிடந்து புரளுகிறீர். சத்தியமேசிறந்தது? இராமனைக்காட்டிற்கனுப்பும் உம்மை மும்முறை எச்சரிக்கிறேன். இல்லையானால் என் உயிரை விடுகிறேன்" என்றாள். அதைக்கேட்ட தசரதன் 'பாபி; இந்த முடி சூட்டு விழாவைத் தடுத்தால் நீயும் உன் மகனும் எனக்கு உத்தரக்கிரியைகளைச் செய்யவேண்டாம்' என்றான். கைகேசி திரும்பவும் 'உமது வார்த்தைகள் என் மனத்தை வருத்துகின்றன. இராமனை இப்போதே வரவழைத்துக் காட்டுக்கனுப்பி பரதனை அரசனாக்கி உமது வாக்கை நிறைவேற்றும்' என்று கூறினாள். தசரதன் தர்ம பாசத்தால் நான் கட்டுப்பட்டிருக்கிறேன். ஆனாலும் என் மகனை இன்னுமொருமுறை பார்க்கவிரும்புகிறேன்" என்று கதறினான்.

பொழுது விடிந்தது. வசிட்ட முனி முடி சூட்டுக்கு தயாராக வந்தவன் அந்தப்புரத்தருகே சுமந்திரனை கண்டான். உடனே வசிட்டன் தான் வந்திருப்பதையும் முகூர்த்தம் நெருங்குவதையும் தசரதனிடம் போய்க்கூற அவனை அனுப்பினான்-

சுமந்திரன் உள்ளே போய் தசரதனிருக்குமிடத்தை யடைந்து அவனருகே சென்று அவனிலையை அறியாமல் பலவிதமாகப் புகழத்தொடங்கினான். தசரதன் அச்சொற்களால் இன்னும் மனம் நொந்து "சுமந்திரரே! சொல்லமுடியாத துக்கத்தை அடைந்து கொண்டிருக்கும் என் மனத்தை உமது சொற்கள் இன்னும் அதிகமாகப்புண்படுத்துகின்றன" என்று பரிதாபமான குரலுடன் சொன்னான்- அதைக்கேட்டுச் சுமந்திரன் திடுக்கிட்டு துக்கத்தால் சோர்ந்திருக்கும் மன்னனை உற்றுப் பார்த்து ஒன்றும் பேசாமல் கை கூப்பிக்கொண்டு அங்கிருந்து போகப்புறப்பட்டான். அரசன்

(இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# பெண்களைக் குறைசொல்லல் ஆண்களுக்கு அழகோ.

[பினங்கு ஸ்ரீமதி ஜானகியம்மாள் எழுதுவது]

நம் நாட்டில் மனிதர்கள் பெண்களை கேவலமாய் எண்ணி அவர்களுக்கு மிருகங்களை உதாரணமாகச் சொல்லி வருகின்றார்கள். இவ்வுதாரணத்தை அன்னிய நாட்டினர்கள் உபயோகிப்பதில் நமக்குக் கவலையில்லை. அவர்கள் உபயோகிப்பது பொருந்தவும் கூடும். நம் தமிழ் நாட்டினர் மிருகம் என்னும் சொல்லை பெண்களுக்கு உதாரணச் சொல்லாய்ப் பாவிப்பது அழகாகுமா? வென யோசிக்கவேண்டும். பகுத்தறிவில்லா மிருகங்களைவிட நாங்கள் [பெண்கள்] தாழ்மைப் பட்டவரா? வென்பதை இறைவனால் கொடுக்கப் பட்ட பகுத்தறிவால் ஆராய்ச்சிசெய்ய வேண்டும். அல்லது அனுபோக அறிஞர் பலரால் எழுதப்படும் கட்டுரைகளைத் திரட்டிக் கொண்டு வாரம் ஒருமுறை வெளியாகும். "குடி அரசை" யாவது படிக்கவேண்டும். இதுவும் முடியாவிட்டால் வாயை யாவது மூடிக் கொண்டு குறை சொல்லாது இருக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் மதத்தின் பெயர்சொல்லி அடிமையாக்கும் பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் அழிக்கச் சில வீரர்கள் வெளித்தோன்றி இருப்பதால் அடிமைப்பட்டவர்களுக்கு ஆனந்தமும் ஐதீகர்களுக்கு வயிற்றெரிச்சலும் வந்துள்ளது.

தமிழர்களிடை பரவியுள்ள, பெண்களை அடக்கி ஆளும் 'ஆண்மை' தமிழ் நாட்டுடன் நிற்காமல் பிழைக்கவந்த பிறநாட்டிலும் கூட பிரஜாவியாய் நகைக்க வந்துவிட்டதே! பெண்களை அடிமை படுத்துவதுமன்றி அவர்களைச் சீர்குலையச்செய்து தெருவில் அலையவிட்டோடுகின்றார்கள். இம்மலேயா நாட்டில் அனேக பிறநாட்டினர் மனைவி மக்களுடன் வசிப்பதில், அவர்களிடை ஏதேனும் குற்றங்குறைகள் ஏற்படுமாகில், அக்குற்றங்களைச் சீர்திருத்தி நன்கு கௌரவமாய் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் நம் தமிழர்களின் குடும்பங்களில் ஏதேனும் சிறிது குற்றம் குறைகள் தோன்றினும் ஊர் சிரிக்க நடுச்சந்திக்கு வந்து விடுகின்றன. இதனால் பெண்களின் நிலையோ பெரிய பரிதாபமாகும். தமிழர் சிலர் அங்குள்ள பெண்களைத் திருட்டுத் தனமாக நய வஞ்சக பொய்களைச் சொல்லி இந்நாடு அழைத்து வந்து, ஏதேனும் தங்கள் கைக்கு அகப்பட்ட பொருளைச் சுருட்டிக்கொண்டு, பெண்களை துர் நடத்தைகளில் செலுத்தியும் துர் நடத்தைகளுக்கு வழிகாட்டியும் அடகு வைத்து விட்டும் ஓடி விடுகின்றனர். இவ்விதம் செய்வதினால் பெண்கள் கெட்டுப்போவதற்கு யாரை கேட்கவேண்டும்.

பெண்கள் யாரேனும் ஆண்களைத் திருட்டுத் தனமாய் நயவஞ்சகப் பொய் சொல்லி அழைத்துவந்து மோசம் செய்ததுண்டா? ஆண்களின் நயவஞ்சக மோச வலையில் சிக்குண்டு மோசமடைந்த பெண்மக்கள் இம் மலேயா நாட்டில் அலையும் பரிதாபத்தை எழுத ஏட்டில் அடங்காது எண்ணில் அடங்காது. இவ்விதம் அலங்கோலப் பட்டு அலையும் பெண்களினால் ஆண்களுக்கு ரோஷமும் பரிதாபமும் கொஞ்சமும் இல்லாமல், இவர்களைச் சீர்திருத்த முயலும் "குடி அரசு" போன்ற பத்திரிகைகளையும் தூற்றி வயிறு பிழைக்கிறார்கள். உதாரணமாக சிங்கை நகர் வேசிகளின் சிங்காரலாவணி," என பெண்களை மிக இழிவு படுத்திப் பாடியவர் ஆண்களின் வேசித்தனத்தையும் மோசத் தனத்தையும் குறிப்பிட்டுப் பாடி இருப்பாராகில் அவரை நிஷ்பக்ஷபாதி என சொல்லலாம்.

ஓர் நய வஞ்சக மோசக்காரன்.

ஓர் பெண்ணை சில காலத்துக்கு முன் தமிழ் நாட்டிலிருந்து இந் நாட்டுக்கு அழைத்து வந்து சுங்குரும்பை என்னுமிடத்தில் அப்பெண்ணை மோசம் செய்துவிட்டு ஓடி விட்டான். பிறகு அப்பெண் தொழிலாளி யொருவரை தஞ்சமடைந்திருந்தாள். அத்தொழிலாளி அப்பெண் மூலமாக ஓர் ஆண் குழந்தையும் பெற்றான். சிறிது காலத்திற்குப்பிறகு அத்தொழிலாளி தமிழ் நாடு செல்லும்போது இவளை அழைத்துச் சென்றால் தன்னை தம் இனத்தார்கள் சேர்க்கார் எனக் கருதி அப் பெண்ணை விலக்க முயன்றார். இதையறிந்த அப் பெண் "நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே! என்னையும் என் பிள்ளையையும் விலக்கக் காரணம் யாதோ?" வென தான் கொண்ட கணவனைக் கட்டியழுதாள், கதறிக் கதறிப் புரண்டழுதாள். இதற்கு கொஞ்சமேனும் இரங்காமல் அத்தொழிலாளி அப்பெண்ணை அடித்துத் துன்புறுத்தி பலவந்தப் படுத்தி விரட்டிவிட்டுத் தன் ஊர் சென்று ஓர் புதுப் பெண்ணை கல்யாணம் செய்து, அப்பெண்ணையும் அங்கேயே விட்டு விட்டு, திரும்பவும் பரம யோக்கியனைப் போல் இந் நாடு வந்திருக்கின்றார். இன்னும் எந்தப் பெண்ணையாகிலும் மோசம் செய்துவிட்டுப் போகலாம். என எண்ணி, வந்திருக்கிறார் போலும்! இவ்வயோக்கியரால் துரத்தப்பட்ட பெண் உணவுக்கும் உடைக்கும் வழியின்றி தன் பிள்ளையை 25 வெள்ளிக்கும் புடவை ஒன்றுக்கும் விற்று விட்டு எங்கோ சென்று விட்டாள் இவ்வளவுக்கும் காரணம் நம் நாடும். நம் மதமும், நம் சாதியும் அல்லவா? தமிழ் நாட்டிலிருந்து ஆண்களின் மோசத்தினால் இந்நாடு வரும் பெண்மக்களைக் கண்டால் பெண்களின் நிலைக்கு யார் காரணமென்பதும் விளங்காமல் போகாது. மிருகத்தைப் பார்க்கினும் தாழ்ந்தவர்கள் ஆண்களா? பெண்களா? என்பதும் விளங்கும். பெண்களை ஆண்கள் அடக்கி ஆளுதலும் மோசம் செய்தலும் நம் நாட்டினரை விட்டு என்று தொலையுமோ அன்றுதான் நாம் மனிதராவோம் சுதந்திரம் பெறுவோம்! இந் நாட்டில் வசிக்கும் ஐரோப்பிய பெண்கள் மட்டிலும் நல்லபடியும் சீர்குலையாமலும் ஆண்களுடன் சம கௌரவமாக வாழ்ந்து வருகின்றார்களே! அவர்களும் நம்மைப்போல் மனிதர்தானே! அவர்கள் மட்டும் ஏன் அவ்வித உயர்நிலையில் இருக்கவேண்டும்? நம் நாட்டுப் பெண்கள் மட்டிலும் ஏன் ஊர் சிரிக்க வாழவேண்டும்? என என் அப்பாவை ஓர் நாள் கேட்டேன்- அவர் சொன்னதாவது:— "பிற நாடுகளில் பாப்பாரும் அவர்களின் மதமும் சரியாய்க் குடியேறாததினால் பெண்களுக்கு சுதந்திரம் சிறிது இருக்கின்றது" என்று சொன்னார்.

சகோதரர்களே! வெள்ளைக்கார பெண்களுக்கு அவர்கள் கொடுத்திருக்கும் சுதந்திரத்தைப் போல் நீங்கள் எங்களுக்குக் கொடுக்கப் பயந்தாலும் ஆண்களைப்போல் பெண்களும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்றும் பெண்களுக்கும் ஆண்களைப் போன்ற எல்லா உணர்ச்சிகளும் உண்டு என்றும் ஒப்புக்கொண்டு உங்கள் சகோதரியாகிய எங்களை நடத்தினால் போதுமானது என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

## திரு. பாவலருக்கு சில ஐய வினாக்கள்.

தாங்கள் இதிகாசம் என்ற தலைப்பின் கீழ் எழுதிவரும் இராமாயண கட்டுரைகள் தமிழ்நாட்டுக்கு உணர்ச்சி தரக்கூடிய விஷயப் பொலிவோடு அழகாகத் தீட்டப்பட்டிருக்கின்றன. அதில் எழும் ஐயங்களைத் தீர்க்கவேண்டியது தங்கள் கடனென உன்னி சிலவற்றைத் தருகிறேன். ஒவ்வொன்றிற்கும் தங்கள் ஆராய்ச்சியை சுருக்கமாக வெளியிட விரும்புகிறேன்.

1. இராமாயணம் இந்தியாவில் நடந்த உண்மைச்சரிதமா அல்லது கட்டப்பட்ட புராணமா

2. அயோத்தி, நாசிக் முதலிய இடங்கள் இருப்பதால் சரித்திரம் என்றால், கும்பகோணம் திருவல்லிக்கேணி முதலியன இருப்பதால் இராஜம்பாள் நாவலையும் உண்மை என்று கருத இடமுண்டல்லவா?

3. சரித்திரமானால் கி. மு. அல்லது கி. பி. எந்த நூற்றாண்டில் நிகழ்ந்ததென ஆதாரம் இதுவரை கிடைக்கப் பெற்றிருக்கிறதா

4. உண்மைச் சரிதமானால் ஆனந்த ராமாயணம் வால்மீக ராமாயணம் வகைகளுக்களில் எதன்படி நிகழ்ந்தது

5 கட்டுக்கதையானால் கம்பரைப்பற்றித் தாங்கள் குறை கூறுவதற்குக் காரணம் என்ன? கம்பரது புரட்டை ஆராய்வோமென்றும் கூனியின்மேல் மண்ணுண்டை விடுத்த பொய்க்கதையை எங்கே கண்டாரென்பதும் எழுதப்பட்டிருக்கிறது. ஆக்கப்பட்ட கதையானால் இவர் ராமனை எவ்வாறு புகழ்ந்தாலென்ன கதையை எங்கே கண்டெடுத்தாலென்ன நமக்கென்ன? நாவல் மாதிரி மனோபாவத்திற்கும் அறிவுக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு எழுதவேண்டியது தானே? நாவலுக்கு இடம் காலம் அகச்சான்று புறச்சான்று என்றும் தேவையில்லையன்றோ? உண்டாக்குவதில் வால்மீகி என்ன, கம்பர் என்ன, எல்லாப்புளுகும் ஒன்றுதானே? எந்தப்புளுகு விசேஷம். கவிதைக்கு மட்டுமானால் கம்பநாடர் கவிதையைப்போல் மற்றவை கற்றோரின் இதயத்தைக் களிப்பூட்டுமா?

ஆ. சொக்கலிங்கன்
காரைக்குடி

# சைவ சந்தான ஆசாரிய பீடம்:

[புதுவை திரு. கண்மணிதாசன் எழுதியது,]

— 0 —

'குடி அரசு' "திராவிடன்" என்னும் அருமை பெருமை வாய்ந்த பத்திரிகைகள் மூலமாக அவற்றின் ஆசிரியர்களாகிய திருவாளர் இராமசாமி நாயக்கர் அவர்களாலும் திருவாளர் கண்ணப்பர் அவர்களாலும், சாமி சிதம்பரனார் கைவல்ய சாமியார் முதலிய சிறந்த அபிமானிகளாலும் சைவ சமயத்தின் ஆபாசங்களாகிய எவ்வளவோ ஊழல்கள் வெளிவந்து விட்டன.

இவர்கள் ஆராய்ச்சியால் தமிழுலகம் பெருத்த நன்மை அடைகிறது, மேல் அடையவும் போகிறது. இவர்கள் பாரபட்சமின்றி யாவற்றையும் எழுதுகிறார்கள். மூடக் கொள்கைகள் குருட்டுப் பக்திகள் ஒழிந்து உண்மை தலைகாட்டத் தொடங்கி விட்டது. பாப்பனக் கொள்ளை குறைகிறது.

இச்சமயத்தில் நானும் ஒரு சைவக்கொள்ளையையும் பார்ப்பனக்கொள்ளையையும் சொல்லுகிறேன். இது தான் முக்கியமாக வெளிவர வேண்டியது.

சமயத்திலுள்ள மூட நம்பிக்கைகளையும் முரண்பாடுகளையும் ஒருவர் பட்சபாதமில்லாமல் வெளியாக்கிப் பேசினால் மத அபிமானிகள் ஆவேசம் கொண்டு சீறுகிறார்கள். இது சரியா? அறிவுடையோர் காய்தல் உவத்தல் அகற்றி உண்மையை நாட வேண்டும். இதற்குக் கோபம் ஏன்? உலகப் பெருமையையும் வயிற்று வளர்ப்பையும் கருதி மௌனம் சாதிக்கலாமா? ஆவேசம் கொள்ளலாமா? உண்மையைக் கூறுவது அறிஞர் கடன்:

'மெய்கண்டார்' என்பவரைச் சைவசமய சந்தான ஆசாரிய பீடம் என்று பலரும் போற்றுகிறார்கள். தற்காலச் சைவர் பலருக்கும் இவர் தான் குருமூர்த்தி என்றும் சுப்பிரமண்யர் அவதாரம் என்றும் சிலர் பாடியிருக்கின்றனர். சிலர் இவரை ஞானசம்பந்தனோடு சேர்த்து இருவரையும் சைவஉபய தீபங்கள் என்றும் புகழ்ந்துவிட்டார்கள். இவரும் இவர் மாணாக்க பரம்பரையாரும் செய்த நூல்களையே இலக்கணம் இலக்கியம் கற்ற பண்டிதர்கள் படித்தும் பலருக்குப் போதித்தும் பிரசங்கம் பண்ணியும் உரை எழுதியும், அச்சிட்டும், சாரங்கள், வினா விடைகள், உள்ளுரைகள் எழுதியும், பெருந்தொகையான பணமும் தேடி, இவற்றைக்கொண்டே இப்பொழுதும் அகௌரவமாய், பேய் மானிகளாய் வயிறு வளர்த்துப் பெருமையாக வாழ்கின்றனர். இச்சந்தான நூல்களெல்லாம நல்ல இலக்கண இலக்கியங்களாயிருக்கிறபடியால் பண்டிதர்கள் ஜீவனத்துக்கு மெத்தச் சாதகமாயிருக்கின்றன. அதனால் அவற்றிற்குத் தெய்வீகம் கூறிப் போற்றுகின்றனர்.

ஆனால் இந்த மெய்கண்டார் சரித்திரத்திலுள்ள ஆபாசம் போன்ற ஆபாசம் வேறு எந்தச் சமய சந்தானத்திலும் கிடையாது. இவருக்கு இரண்டு வயதிலேயே மெய்யுணர்ச்சி வந்து விட்டதாம். அதாவது முற்றும் உணர்ந்த பூரண ஞானியாய் விட்டாராம்- வாசகர்களே! இம்மூடத்தனமான ஆபாசத்தைப் பாருங்கள். இரண்டு வயசுக் குழந்தையின் நிலைமை என்ன? தெய்வம் ஆவேசித்தாலும் 'அம்மா' 'அப்பா' 'பாச்சி' 'சோச்சி' யென்று உளறுமேயல்லாமல் சங்கநூல் போலக்கடினமான வெண்பாக்களையும் சூத்திரங்களையும் பாடமுடியுமா? சமஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்த்து விடுமா? இதனை நம்புவதார்? இதனை நம்புங்கள்! நம்புங்கள்!! என்று பண்டிதர்கள் ஊளையிடுகிறார்கள். மத அபிமானிகள் இதனை உண்மையென்று போராடுகிறார்கள். இந்தப் பரம ஞானியார் வீதியில் விளையாடிக்கொண்டிருந்தாராம். பரஞ்சோதி முனிவர் என்ற ஒருவர் கயிலாயத்திலிருந்து ஆகாய ரதத்தில் aeroplane ல் அவ்வழியாக வந்தாராம்- காந்தம் ஊசியை இழுப்பது போல ஏதோ ஒன்று அவரது ஆகாயவிமானத்தை இழுத்துக் கீழே இறக்கி விட்டதாம்- பரஞ்சோதி கீழே பார்க்க இந்த இரண்டு வயதுக் குழந்தை காணப்பட்டதாம், உடனே பரஞ்சோதி மெய்கண்டப்பிள்ளையுடைய மூளை (கொழுத்த தலை)யைக் கண்டு ஆச்சரியமடைந்து கடவுள் சொன்ன ரௌரவ ஆகமத்தில் உள்ள பன்னிரண்டு சூத்திரங்களையும் இக்குழந்தைக்கு கணப்பொழுதிலே படிப்பித்து, 'மெய்கண்டார்' என்றபெரிய பட்டத்தையும் சூட்டி அச்சூத்திரங்களைச் 'சிவஞான போதம்' என்று தமிழிலே மொழி பெயர்த்துப்பாடும்படி கட்டளையிட்டு திரும்பவும் அந்த விமானத்தில் ஏறி அதைச் செலுத்திக் கொண்டு போய் விட்டாராம்.

பரஞ்சோதி இருந்து வந்த கைலாசம் யாது? திபெத்திலுள்ள "Mount Kailas" கைலாஸ் மலைச்சிகரமா? இங்கே தான் பார்வதியை பக்கத்தில் வைத்துக்கொண்டு பரமசிவன் இருக்கிறான் என்று புராணங்கள் கூறுகின்றன பண்டிதர்களும் பள்ளிக்கூடங்களிலே சொல்லுகிறார்கள். பிள்ளைகள் கேள்விகேட்டால் பண்டிதர்கள் அதட்டுவார்கள், மௌனமாகவும் இருப்பார்கள். பிரசங்க மேடையில் என்றால் எல்லாரும் 'ஆம், ஆம்' என்பர், இக்கயிலையை ஏன் பார்க்கமுடியாது? மெய்கண்டார் காலத்தில் அதாவது 700 வருடங்களுக்கு முன் ஆகாயரதம் ஏரோப்ளேன் இந்தியாவில் உண்டா? இதனை ஆராய்ச்சிக்காரரும் அறியாதவரா? இவ்வாறு யாத்திரை செய்வது அக்காலத்தில் வழக்கமானால் அக்காலத்து அரசர்களும் சடையப்ப வள்ளலும் கம்பரும் இத்தகைய விமானங்களில் யாத்திரை செய்யாது விடுவார்களா? சைவர்கள் கயிலையையும் எளிதாக அடைந்திருப்பார்களல்லவா?

பின்பு இக்குழந்தைக்குப் பொல்லாப் பிள்ளையார் என்னும் கல்லுப்பிள்ளையார் சிவ ஞான போதத்தைப் பாடஞ் சொன்னாராம். அதன் பின் தான் பரஞ்சோதி சொன்னவைகள் நன்றாகத் தெரிந்ததாம். மெய்கண்டப்பிள்ளை (முற்றும் உணர்ந்த பிள்ளை) க்குப் பரஞ்சோதியும் கல்லுப்பிள்ளையாரும் என்ன படிப்பிக்கவேண்டும்? அதுவும் சமஸ்கிருத சுலோகத்தை படிப்பிக்கவேண்டுமா? முற்றுணர்ந்த மெய்கண்டப்பிள்ளை பதி பசு பாச இலக்கணம் அறியாதவரா? கல்லுப் பிள்ளையார் எவ்வாறு பாடஞ்சொன்னார்? பார்ப்பான் படைக்கும்மோதகம், பொங்கல் புளிபோரைகளைத் தின்னுமல் வாயையும் கண்ணையும் மூடிக்கொண்டு அவைகளைத் திரும்ப அப்பார்ப்பனனையே உண்ணச்செய்கிற கல்லுப்பிள்ளையார் மெய்கண்டபிள்ளைக்கு வாய்திறந்து பாடஞ் சொல்லுமா? இப்படியாக இதனைப் பண்டிதர்கள் நம்பலாமா? காலேஜ் பிள்ளைகளுக்கு இதனைச் சொல்லலாமா? இரண்டு வயதுப் பிள்ளை கல்லுப் பிள்ளையாரை பூச்சாண்டி என்று கருதிப் பயப்படாதா? இவ்வகையான பூச்சாண்டிப் புளுகுகள் சைவ சமயத்தில் அல்லாமல் வேறு சமயத்திலும் உண்டா?

மெய்கண்டப் பிள்ளை பின் சம்ஸ்கிருத சுலோகங்களை வழுவாமல் மொழிபெயர்த்து மெத்தக் கடினமான சூத்திரங்களும் வார்த்திகமும் வெண்பாவும் பாடியதாம்- தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களும் இலக்கியமும் சம்ஸ்கிருதமும் தருக்கமும்படித்து ஆகமமுறைப்படி சமய விசேட நிர்வாணதீக்கைகேட்டவபக்குவர்கள் தான் தம்பிரான்கள் பண்டிதர்களிடம் இந்நூலைப் பழக்கலாமாம். இந்நூல் நந்தி பரம்பரையில் இருந்து வந்ததாம். தான் தோன்றி மெய்கண்டார் ஒரு பரம்பரையும் சொல்ல வில்லை, குருவணக்கம் கூட சொல்ல மறந்து விட்டார். மெய்கண்டப்பிள்ளை அறியாத இந்த இரகசியத்தை அவர் பரம்பரா மாணாக்கரும பண்டிதர்களும் எப்படி அறிந்தனர் என்று தெரியவில்லை. மனிதரெல்லாம் "மந்தி" பரம்பரையில் வந்தவர் என்று "டார்வின்" பண்டிதர் சொல்லுகின்றார். சைவப்பண்டிதர் நந்திப் பரம்பரையை என்கூறுகிறார்கள்? இவ்வுண்மைகளை நிலை நாட்ட முடியுமா வென்று பண்டித சிரோமணிகளைக் கேட்கிறேன்.

உலக மாக்கள் என்ன செய்வார்கள்! பண்டிதர்களாகிய ஆஷாடபூதிகள் மாயவலையிலகப்பட்டு இந்நூல்கள் தான் கடவுள் சொன்ன நூல்களென நம்பிப்பணம் கொடுக்கிறார்கள். சைவப் பண்டிதர் இந்நூல்களைப் பரப்புவதில் கண்ணுயிருக்கிறார்கள்.

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க,

# மந்திரத்தைப்பற்றிய ஓர் சம்பாஷணை,

கிருஷ்ணன் — மந்திரமென்பதே உலகத்தில் இல்லை என்று நீர் சொல்வதாய் கேள்விப்பட்டேன். அது உண்மைதானா?

ராமன் — ஆம்! அது உண்மைதான்.

கிருஷ்ணன் — ஏன் இந்த விவகாரத்தில் தலையிட்டுக்கொண்டீர், உலகிலுள்ள எல்லோரும் மந்திரமிருப்பதாகவும் அதற்கு அநேக சக்தி இருப்பதாகவும் சொல்லும் பொழுது நீர் மாத்திரம் இல்லையென்று சொன்னால் எல்லோருடைய மனமும் புண்படுமல்லவா?

ராமன் — அநேக நாட்களாக மந்திரக்காரர்கள் பாமர மக்களை ஏமாற்றி "நான் அது செய்கிறேன், இது செய்கிறேன், உமது எதிரிகளை கொன்றுவிடுகிறேன், கால் கை வரால் செய்து விடுகிறேன், மிட்டாய் தருவித்து கொடுக்கிறேன். ரூபாய்கள் தருவித்துத் தருகிறேன்" என்று மக்களிடம் ரூபாய்களை கொள்ளையடித்து ஒட்டாண்டிகளாக்கிக்கொண்டு திரியும் புரட்டர்களிடமிருந்து மக்களை தப்புவிப்பதற்கும்; இது காறும் பொருட்களையும் நாட்களையும் அறிவையும் இழந்து புண்பட்டிருப்பதை ஆற்றுவதற்கேயன்றி புண்படுத்தவல்ல. இதுவும் நான் மாத்திரம் புதிதாக சொல்லிவிடவில்லை. சுயமரியாதைக்காரர் யாவருமே சொல்லுவார்கள்.

கிருஷ்ணன் — யாராவது மந்திரம், செய்து ருஜுப்படுத்தி விட்டால்?

ராமன் — இல்லாததை இல்லை என்று சொல்லுகிறேனே யொழிய இருப்பதை போய்விடச் சொல்லி நான் சொல்லவில்லை. இருக்குமானால் சந்தோஷந்தான், அன்று முதலே மந்திரங்களைக் கற்றுக்கொண்டு என் விரோதிகளின் மீது பிரயோகித்து அவர்களை பிழைக்க விடாமல் ஹிம்சித்து ரூபாய்களை தருவித்துக்கொண்டு பணக்காரனாய் விடுவேன்.

கிருஷ்ணன் — மந்திரத்தினால் தருவித்துக் கொள்ளும் பணம் மூன்றே முக்கால் நாழிகைதான் இருக்குமாம்.

ராமன் — அவ்வளவு நாழிகை இருந்தால் போதும். அதற்குள்ளாக பாங்கியில் கொண்டு போய் போட்டு ரசீது பெற்றுக்கொள்வேன். அதற்குப்பின்னால் பாங்கியில் இருக்கும் ரூபாய்கள் தானே காணாமற்போய் விடும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை,

கிருஷ்ணன் — மந்திரக்காரர்கள் இதை செய்துகாட்டுவதற்கு பயப்படுகிறார்கள், ஏனென்றால் கவர்ன்மெண்ட் விரோதமென்றும், ஊரார் பல்லைத்தட்டி விடுவார்களென்றும், மற்றும் ஏதேதோ சொல்லுகின்றார்கள்.

ராமன் — அவர்கள் அப்படித் தான் சொல்லுவார்கள். சட்டியில் இருந்தாலல்லவோ அகப்பையில் வரும். என்றாலும் பெரிய காரியம் ஒன்றும் செய்யவேண்டியதில்லை' மந்திரத்தினால் ஒரு சிறிய பொருள் வைத்த விடத்தை விட்டு சிறிது நகர்ந்தாலும் நமக்கு போதுமானது. இதற்குக்கூடவா கவர்ன்மெண்டார் பிடித்துக்கொள்வார்கள்? ஊரார் பல்லைத்தட்டிவிடுவார்கள்? உண்மையிலேயே மந்திரக்காரர்கள் பார்த்தால் மாந்திரீக புஸ்தகம் போடுவது மோடி வைப்பது பாடம் போடுவது, பேயோட்டுவது, முதலியவைகள் கவர்ன்மெண்டுக்கு விரோதமாகாதா?

கிருஷ்ணன் — 'ஆனாலும் சில மந்திரவாதி'கள் ஆகட்டுமென்றுதான் சொல்லுகிறார்கள்.

ராமன் — வாயில் சொன்னால் போதுமா? நேரில் காட்ட வேண்டாமா? இன்றைக்கு நாளைக்கு என்பது இல்லை என்பதற்குத் தான் அடையாளம்.

கிருஷ்ணன் — மந்திரங்கால் பதிமூன்கால் என்று ஆன்றோர் சொல்லியிருப்பதைப்பார்த்தால் கொஞ்சமாவது இருப்பதாகத்தானே தெரிகிறது.

ராமன் — அப்படியானால் 'மந்திரத்தில் மாங்காய் விழாது' என்று ஆன்றோர் சொன்னதை மாத்திரம் ஏன் மறந்து விட்டீர்?

கிருஷ்ணன் — மலையாளத்தில் மந்திரக்காரர் அதிகமென்று சொல்லுகிறார்களே.

ராமன் — ஆம் அப்படித்தான் சொல்லுவார்கள். அவ்விடம் போய் கேட்டால் இவ்விடம் விசேஷமாக இல்லை, திருநெல்வேலி பக்கம் அதிகமென்று சொல்லுவார்கள். அவ்விடம் போய்க்கேட்டால் பொம்மசமுத்திரமெனுமூரில் அதிகமென்பார்கள். இது தெரிந்த விஷயந்தானே.

கிருஷ்ணன் — ஆனால் மந்திரக்காரர்களுக்கே மந்திரம் சந்தேகமென்கிறீர்களா?

ராமன் — அவர்களுக்கு மந்திரத்தின் மீது சந்தேகமில்லை. ஒவ்வொருவரும் 'நமக்குத்தான் தெரியவில்லை, குரு நமக்குசரியாய்ச்சொல்லவில்லை இன்னும் அநேகருக்குத் தெரியும்.' என்று நினைத்திருக்கிறார்கள்.

கிருஷ்ணன் — எவ்வகையிலும் ருஜுப்படுத்த முடியாவிட்டால் மந்திரமில்லையென்று தானே ஒப்புக்கொள்ளவேண்டும்.

ராமன் — வாஸ்தவந்தான் அப்படி ஒப்புக்கொள்ளுவார்களென்று நான் நினைக்கவில்லை.

கிருஷ்ணன் — ஏன்?

ராமன் — "எத்தனையோபேர் கெட்டிக்காரர்கள் இருப்பார்கள், நமக்குத் தெரியவில்லையே ஒழியவேறில்லை. மந்திரம் தெரிந்தவர்கள் தெரியும் என்று வெளியில் வருவார்களா" என்று சொல்லிவிடுவார்கள்,

கிருஷ்ணன் — அப்படியே எண்ணிவிட்டால் உண்மையைத் தெரிவதுதான் எப்படி?

ராமன் — உண்மையைத் தெரிந்தே தீர வேண்டுமானால் வாத பித்த சிலேத்துமகுண வித்தியாசத்தினால் யாருக்காவது கால் கை வீங்கிக்கொண்டால் அவ்வூரில் மந்திரக்காரனென்று இருப்போனைப் பிடித்து வந்து "நீதான் மந்திரம்செய்து இப்படி செய்து விட்டாய்" என்று நன்றாய்உதைத்துபல்லைத்தட்ட ஆரம்பித்தால் அவன் "ஐயோ சிவனே நான் ஒன்றும்செய்யவில்லையே! எனக்கு மந்திரமென்பதே தெரியாதே" என்று அழ ஆரம்பித்து விடுவான், அப்போது மந்திரக்காரன் யோக்கியதை தெரிந்து போகும். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் மந்திரக்காரரின் பற்களுக்கு விடுதலையும் பாமர மக்களின் அறிவுக்கு விடுதலையும் கொடுத்து விட வேண்டுமென்றுதான் இத்துறையில் இறங்கினேன்,

கிருஷ்ணன் — இதனாலேயே நம்மைகெட்டவன் என அநேகர் சொல்லுகிறார்களே?

ராமன் — சொன்னால் என்ன? எல்லோருக்கும் நல்லவனாயிருக்க எவனாலும் முடியாது என்பது தான் எனது அபிப்பிராயம் எப்படி என்றால், தான் செய்யும் காரியமே மறுநிமிஷத்தில் தனக்கே பிடிக்காமல் தனைத்தானே நொந்து கொள்ளக் கூடியது மனித சுபாவம். அப்படி இருக்க ஒருவர் நடவடிக்கை மற்றவருக்கு எப்படி பிடிக்கும்?

கிருஷ்ணன் — ஆனால் மந்திரம் என்னும் வாக்கியம் ஏற்பட்டதன் கருத்துத்தான் என்ன?

ராமன் — இப்பொழுது உன்னுடைய மனம் வெகு ஆவேசத்துடன் இருப்பதால் நியாயத்தைஏற்றுக்கொள்ளவே மாட்டாய். இன்னும் சிலமாதங்கள்மந்திரக்காரரைத்தேடித்திரிந்து அலைந்து மெய்சலித்து கொஞ்சம்சாந்த மடைந்த பிறகு மந்திரமென்பதன் உண்மைக்கருத்தைத்தெரிவிக்கிறேன்.

கிருஷ்ணன் — ஆனால் நான் போய் வரட்டுமா

ராமன் — நல்லது.

ல. தி. ஸ்ரீனிவாசன், குகை, சேலம்,

---

## பர்தாவின் அநியாயம் என்ற வியாசத்துக்கு மறுப்பு

"கோஷாவினால் நம் முஸ்லீம்கள் அடைவது என்ன' என்று ஜனாப் எஸ். எம். உசேன் சாயபுவால் ஒருவியாசம் 4—11—28ல் 'குடி அரசில்' பிரசுரிக்கப்பட்டிருக்கிறதை பார்வையிட்டு அதற்கு மறுமொழியாக வரைவது.-

ஜனாப் எஸ். எம். உசேன்சாயபு அவர்களே! ஆட்டுமந்தையை பார்த்திருப்பீரானால் மந்தையில் இருக்கும் பெண் ஆட்டை எத்தனை ஆண் ஆடுகள் துரத்த ஆரம்பிக்கின்றன என்பதும் பெண் ஆடு படும் கஷ்டம் எவ்வளவென்பதும் தெரிந்திருக்கக்கூடும், அதுபோலவே மனித கூட்டத்தில் ஆண்களுடன் பெண்களும் சேர்ந்திருக்கும் பக்ஷத்தில் ஆடுமாடுகளைப்போலவே மனிதகூட்டமும் ஆகிவிடும். அவ்வித மிருகத்தனம் உண்டாகாதபடி மனுஷத்தனம் உண்டாவதற்கே கோஷாமுறை குர்ஆனிலும் ஹதீஸிலும் (ஹுயக்மு) உண்டாகி சுமார் 1400 வருஷமாக நடந்துவந்திருக்கிறது.

அதனால்தான் ஒருபுதல்வியை ஒருபுதல்வன் கல்யாணம் செய்வதானால் புதல்வனுடைய பெரியோர்கள் புதல்வியைப் பார்வையிட்டு புதல்வியின் பெரியோர்களிடம் பேசி, கல்யாணம் செய்வார்கள். புதல்வனுக்கும் புதல்விக்கும் ஒத்துவராவிட்டால் இருவரையும் பிரித்துவிட தல்லாக் என்று ஒன்று ஏற்பட்டிருப்பதைக் கொண்டு பிரித்துவிடுகிறார்கள்.

இனியாவது எஸ். எம். சாயபு இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பாரா? என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அப்தல் ஸுபஹான் சாயபு
வா. தா. சிறுதையூர்.

# சிதம்பரம் முனிசிபாலிட்டியும் பார்ப்பனர்கள் அக்கிரமமும்.

சிதம்பரம் முனிசிபாலிட்டியில் பார்ப்பனர்கள் செய்த அக்கிரமத்தைப்பற்றி நாம் முன்னொருநாள் எழுதியிருக்கிறோம். நாம் என்ன எழுதியும் இன்னும் பார்ப்பனர் அக்கிரமம் நீங்கிய பாடில்லை. "பிரமச்சாரி" பார்ப்பனரும், சென்னை லோகல் செல்ப் கவர்மெண்ட் உதவிக்காரியதரிசியான திரு இராமையா சாஸ்திரி என்ற மற்றொரு பார்ப்பனரும் இருக்கும் மட்டும் ஏன் சிதம்பரம் பார்ப்பனர்கள் தலை தொழுத்துத் திரியமாட்டார்கள்? சிதம்பரம் பார்ப்பனர்கள் முனிசிபாலிட்டியைப் பொறுத்து என்னவென்ன அக்கிரமங்கள் செய்கிறார்களோ அதற்கெல்லாம் பார்ப்பன ஜில்லாக் கலெக்டரும் பார்ப்பன உதவிக் காரியதரிசியும் ஆதரவு கொடுக்கின்றார்கள் என்று நாம் சொல்வது மிகையாகமாட்டாது.

சிதம்பரம் முனிசிபல் சேர்மெனாய் இருந்த திரு. வேணுகோபால்பிள்ளையவர்களை மறுபடியும் சேர்மனாக வாராதபடி செய்ய அவர் அபேட்சகராய் நின்ற 2 வது வார்டு எலெக்ஷன் நடைபெறாதபடி வைஸ் சேர்மன் சாஸ்திரி என்ன சூழ்ச்சி செய்தார் என்பதை நம் வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். திரு வேணுகோபால் பிள்ளையவர்கள் அபேட்சகராய் நின்ற மேற்படி வார்டு தேர்தலைப் போலிங் ஆபீசர் வரவில்லை என்ற மோசடி காரணத்துக்காக வைஸ் சேர்மன் சாஸ்திரி நிறுத்திவிட்டார். நிறுத்திவிடவே சர்க்கார் அவ்வாறு நிறுத்தியது தவறென்றும் அவ்வார்டின் தேர்தலை உடனே நடத்தவேண்டுமென்றும் உத்திரவு இட்டார்கள். என்ன உத்திரவிட்டும் வைஸ் சேர்மன் தேர்தல் நடத்துவதைக் காலந்தாழ்த்திக்கொண்டே வருகிறார். இன்னும் அவ்வார்டின் தேர்தல் நடைபெற்றபாடில்லை. ஆகையால் சர்க்கார் சேர்மன் எலெக்ஷனில் திரு வேணுகோபால்பிள்ளை கலந்துகொள்வதற்காக அவருக்கு நியமனம் செய்ய வேண்டியதாயிற்று. இது நிற்க,

திரு வேணுகோபால் பிள்ளை சேர்மனாய் இருந்த காலத்து அவர் சேர்மன் தேர்தல் இம்மாதம் எட்டாந்தேதி நடைபெறவேண்டுமென்று அறிக்கை எழுதி எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பியிருந்தார்கள். அக்டோபர் மாதம் 31 தேதி முடிவாகவும் திரு வேணுகோபால் பிள்ளையின் சேர்மன் உத்தியோக காலமும் முடிவுக்கு வந்து விட்டது. உடனே வைஸ்சேர்மன் சாஸ்திரி திரு. வேணுகோபால் பிள்ளையின் எட்டாந்தேதி நடைபெற வேண்டுமென்ற தேர்தல் அறிக்கையை ரத்து செய்து சேர்மன் தேர்தல் 5 தேதி நடைபெற வேண்டுமென்று மற்றொரு அறிக்கையை விடுத்தார், வைஸ் சேர்மனுக்கு எட்டாந்தேதி அறிக்கையை ரத்து செய்ய அதிகாரம் கிடையாதென்பதை முனிசிபல் சட்டத்தைப்படித்த ஒரு சிறு பிள்ளை கூட அறியும். இருந்தாலும் அக்கிரமக்காரர்களுக்குச் சட்டமேது? கட்டுப்பாடேது? ஐந்தாந்தேதியன்று வைஸ் சேர்மன் சாஸ்திரியும் அவர்தம் கூட்டத்தாரும் ஒன்று கூடி ஒரு பார்ப்பனரைத் தலைவராய்த் தெரிந்தெடுத்தார்கள். இவ்வாறு வைஸ்சேர்மன், மாஜி சேர்மன் அறிக்கையை ரத்து செய்து 5 ந் தேதியன்று ஆத்திரமவசரமாய் சுவாமி சகஜானந்தா ஆட்சேபித்தும் சேர்மன் தேர்தல் கூட்டம் கூட்டியதற்குக் காரணம் என்னவென்பதை வாசகர்கள் அறியவேண்டும். வேணுகோபால் பிள்ளைக்கு நியமனம் கிடைக்கப் போகிறதென்றும் அந்நியமனம் 6 ந் தேதி கெஜட்டில் வெளியாகப் போகிறதென்றும் வெளியாய் விட்டால் 8 ந் தேதி கூட்டத்தில் கலந்து கொள்வாரென்றும், அவர் கலந்து கொண்டால், சேர்மன் பதவி அவருக்குக் கிடைத்து விடுமென்பதும் வைஸ் சேர்மன் சாஸ்திரிக்கும் அவர் தம் கூட்டத்தாருக்கும் தெரியும். ஆகையினால் அவரைக் கலந்து கொள்ளாதபடி செய்ய, வைஸ் சேர்மன் சாஸ்திரி 8 ந் தேதியை ரத்து செய்து, 5 ந் தேதி என்ற மறு உத்திரவு பிறப்பித்தார். இது தான் உண்மை.

இனி 5 ந் தேதி நடைபெற்ற சேர்மன் தேர்தல் செல்லாது என்று திரு. வேணுகோபால் பிள்ளையின் கட்சியார் சர்க்காருக்கும் ஜில்லாக் கலெக்டருக்கும் மனுச்செய்து கொண்டார்கள். ஜில்லாக் கலெக்டர் அதை விசாரிக்கப் போகின்றாராம். ஜில்லாக் கலெக்டர் விசாரித்து இந்த எலெக்ஷன் செல்லும் அல்லது செல்லாது என்று சொல்லுவதற்கு என்ன அதிகாரம் இருக்கின்றதென்று கேட்கின்றோம். ஒரு எலக்ஷன் செல்லும் அல்லது செல்லாது என்று முடிவு சொல்லக் கூடியவர்கள் அரசாங்கத்தார், அப்படியிருக்க ஜில்லா கலெக்டர் நியாயமாக நடந்து கொள்ள வேண்டியவராயின், அவர் நடந்ததை மேல் இலாகாவுக்கு "ரிபோர்ட்" செய்யவேண்டியதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் விசாரணை நடாத்தப் புகுந்திருத்தல் பார்ப்பனக் குறும்பு என்றே நாம் திண்ணமாய்க் கூறுவோம்.

இனி பார்ப்பனக் கலெக்டர் இந்த விசாரணை அக்கிரமத்தோடும் நின்றாரல்லர். சேர்மன் தேர்தல் எட்டாந்தேதி நடைபெறவேண்டுமென்ற முன் அறிக்கையை ரத்து செய்ய வைஸ் சேர்மனுக்கு அதிகாரமில்லையென்று அறிந்த வேணுகோபால் பிள்ளைக் கூட்டத்தார் 8 ந் தேதி முனிசிபல் ஆபீசில் கூட்டம் கூடி தலைவர் தேர்தலை நடத்த விருந்தார்கள். இக்கூட்டம் தான் சரியான கூட்டமென்றும், இக்கூட்டம் திரு வேணு கோபால் பிள்ளையைத் தெரிந்தெடுத்து விட்டால், அவர் சேர்மெனாய் வந்து விடுவாரென்பதும் வைஸ் சேர்மன் சாஸ்திரிக்கும், பார்ப்பன ஜில்லாக் கலெக்டருக்கும் நன்றாய்த் தெரியும். ஆகவே ஜில்லா கலெக்டர் வைஸ் சேர்மனின் அக்கிரமத்தை ஆதரிக்கும் அறிகுறியாய் 8 ந் தேதி நடைபெறப்போகும் கூட்டம் நடைபெறக்கூடாதென்று தடை உத்திரவு போட்டு விட்டார். இவ்வாறு தடை உத்திரவு போட்டதற்குக் காரணம் குழப்பம் நேரிடுவதைத் தடுப்பதற்கு என்று ஜில்லா கலெக்டர் சமாதானம் சொல்லலாம். இதை நாம் நொண்டிச் சமாதானமென்றே சொல்லுவோம். இவ்வாறு ஒவ்வொரு கலெக்டர்களும் இந்த நொண்டிச் சமாதானத்தை வைத்துக் கொண்டு தேர்தல்களை நிறுத்தப் புகுவார்களாயின் எந்தத் தேர்தலும் இம்மாகாணத்தில் நடைபெறாமல் செய்து விடலாம். எட்டாம் தேதி நடைபெற்றால் குழப்பம் நேருமென்று ஜில்லாக் கலெக்டருக்கு யார் சொன்னார்கள்? வசிட்டர் வந்து சொன்னாரா? அல்லது வேத வியாசர் வந்து சொன்னாரா? 5 ம் தேதி கூட்டம் நடக்கலாமாம், நடந்தால் குழப்பம் உண்டாகாதாம்; எட்டாம் தேதி கூட்டம் நடைபெறக் கூடாதாம்; நடந்தால் குழப்பம் நடைபெறுமாம்! குழப்பம் நடந்தால் தான் என்ன? குழப்பத்தை அடக்குவதற்குப் போலீஸ் படை இல்லையா என்று கேட்கின்றோம்.

இது வரைக்கும் ஜில்லாக்கலெக்டர் அக்கிரமத்தை எடுத்துச் சொன்னோம். இனி லோகல் கவர்மெண்டு உதவிக் காரியதரிசி திரு. இராமய்யா சாஸ்திரியின் அக்கிரமத்தைச் சொல்ல வேண்டியவர்களாக வுள்ளோம். திரு. இராமய்யா சாஸ்திரி ஒரு பார்ப்பன சாத்தான். லோகல் செல்ப் கவர்ன்மெண்டு உதவிக் காரியதரிசியாய் இருந்து கொண்டு செய்யும் அக்கிரமத்துக்கு அளவு கிடையாது. எந்த முனிசிபல் சேர்மனைப்பார்த்தாலும் திரு இராமய்யா சாஸ்திரியின் அக்கிரமத்தைத்தான் எடுத்துச் சொல்கின்றார்கள். திரு. இராமய்யா சாஸ்திரியால் சென்னை அரசாங்கத்துக்கே கெட்ட பெயர் உண்டாகிறது. திரு. இராமய்யா சாஸ்திரிக்குப் பார்ப்பனரல்லாதார் என்றாலோ, ஜஸ்டிஸ் கட்சி என்றாலோ கசப்பு. ஆகையால் ஒரு பெருச்சாளிபோல் உதவிக் காரியதரிசியாய் இருந்துகொண்டு, பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு முட்டுக்கட்டை போட்டு பார்ப்பனர்கட்கும், சுயராஜ்யக் கட்சியாருக்கும் உதவிசெய்து வருகிறார். இவ்வுண்மை சிதம்பரம் 2வது வார்டு எலெக்ஷன் நிகழ்ச்சியை நோக்குவோருக்குத் தெரியும்.

திரு. வேணுகோபால்பிள்ளையை அரசாங்கத்தார் நியமனம் செய்ததும், பழைய நியமனச் சீட்டுகளுடன் தேர்தல் நடத்தக்கூடாதென்றும், புதிதாக நியமனச் சீட்டுகள் பெற்று 2வது வார்டுக்குத் தேர்தல் நடத்தவேண்டுமென்றும் சிதம்பரம் ஜில்லா முன்சிப் கோர்ட்டில் சில வோட்டர்கள் உத்திரவு கேட்டார்கள். ஜில்லா முன்சீபும் அவ்வாறே புதிதாக நியமனச் சீட்டுகள் பெற்று தேர்தல் நடத்த வேண்டுமென்று உத்திரவு அளித்துவிட்டார். இது தான் நியாயம். அப்படியிருக்க கோர்ட்டு உத்திரவைப் புறக்கணித்து விட்டுத் திரு. இராமையா சாஸ்திரியின் ஆலோசனையின் பேரில் பழைய நியமனங்களுடனேயே 2 வதுவார்டு தேர்தல் நடைபெறவேண்டுமென்ற சர்க்கார் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது ஏனென்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். நமக்கு மட்டும் அத்தகைய உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் மிகநன்றாய்த் தெரியும். அதுதான் பார்ப்பன சூழ்ச்சி

இதன் தொடர்ச்சி 13 ம் பக்கம் பார்க்க.

# திரு சௌந்திரபாண்டிய நாடாருக்கு வாழ்த்து

## என்றும் கண்டிராத காக்ஷி.

## 10000க் கணக்கான மக்கள் கூட்டம்.

## 1000க் கணக்கான மாலைகள்.

### 100க் கணக்கான அலங்காரப் பந்தல்களும் வளைவுகளும்

## 10க் கணக்கான உபசாரப் பத்திரங்கள்,

ராமநாதபுரம் ஜில்லா போர்டுக்குத் தலைவராய் தெரிந்தெடுக்கப்பட்ட திருவாளர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியநாடார் M. L. C. அவர்களுக்கு நவம்பர் மாதம் 23 தேதிமாலை விருதுநகர் பொது ஜனங்களாலும் ஆங்குள்ள பலஸ்தாபனங்களாலும் ஒரு பெரிய பாராட்டுத் திருவிழா நடத்தப்பட்டது. அத்திருவிழாவானது விருதுநகர் என்றுமே கண்டிராத பெருங் கூட்டத்தினிடையிலும் அவ்வூரார் என்றுமே அனுபவித்திராத மகிழ்ச்சிப் பெருக்கினிடையிலும் வெகு ஆடம்பரமாக நடந்தேறியது.

நகரலங்காரம்,

திரு, நாடார் அவர்களை பாராட்டும் விழா நடத்துவது என்பது 2, 3, நாளைக்கு முன் தான் அதாவது 19ந் தேதி தான் முடிவுசெய்யப்பட்டதானாலும் ஊருக்குள் வீதிகள்தோறும் உற்சவகாலத்து மண்டபக் கட்டளைப் பந்தல்கள் போல் ஒவ்வொரு முக்கியமான வீட்டிற்கு முன்புறமும் முக்கிய தெருக்களின் சந்திப்புகளிலும் சிறு அலங்காரமான பந்தல்களும் கொட்டகைகளும் போடப்பட்டிருந்ததுடன் இடையிடையே பெரிய பெரிய வளைவுகளும் அவை ஒவ்வொன்றிலும் திரு நாடார் அவர்களைப்பற்றியும் பல தலைவர்களைப்பற்றியும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் வாழ்த்துப் புகழுரைகளும் காணப்பட்டதுடன் பல அரிய வாக்கியங்களாலும் கலர் காகிதங்களாலும் துணிகளாலும் புஷ்பங்களாலும் சித்திர வேலைகளாலும் வாழை கமுகு தென்னை முதலியவைகளாலும் அலங்காரப்படுத்தி இருந்தது பார்த்தவர்களுக்குத் தான் அதன் அழகும் ஆச்சரியமும் பெருமையும் விளங்கும். சுருங்கச் சொன்னால் ஒரு பட்டாபிஷேக ராஜ பவனிக்கு ஊர் எப்படி அலங்காரம் செய்யப்படுமோ அதற்கு குறைந்ததென்று சொல்ல முடியாது. ஒவ்வொரு வீடும் தனித்தனியே அலங்கரிக்கப்பட்டிருந்ததும் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

தலைவர்கள் வருகை.

திருவாளர்கள் சவுந்திர பாண்டிய நாடாரும், பி. டி. ராஜனும், ஈ. வெ. ராமசாமிநாயக்கரும், சோமசுந்தர முதலியாரும், ஷண்முகவேலு, கூடலிங்கம் பிள்ளை முதலியவர்களும் மாலை ஐந்து மணிக்கு மதுரையிலிருந்து ரயில் மார்க்கமாய் விருதுநகர் ஸ்டேஷனுக்கு வந்ததும் கூட்டத்தால் ரயில் மெதுவாக வரவேண்டியிருந்தது. ரயில் மேடையில் 2 பர்லாங்கு தூரத்திற்கு மக்கள் பதினாயிரக்கணக்காய் பலஸ்தாபனங்களின் பேரால் கூடியிருந்ததுடன் ஒவ்வொருவரும் பெரிய பெரிய மாலைகளுடனும் பன்னீர்ச் செம்புகளுடனும் மேளம், பாண்டு, யானையின் ஊங்காரம், வாலிபர்களின் ஜே ஆகிய சப்த கோஷத்துடனும் வண்டியை அடைந்து மாலையிட்டு வரவேற்று பன்னீர் தெளித்து ரயில்வே மேடையிலேயே ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த சிற்றுண்டி அவர்களுக்கு அழைத்துப்போய் சிற்றுண்டி அளித்து திரு நாடார், பி. டி, ராஜன் நாயக்கர் ஆகியவர்களை மோட்டாரில் ஏற்றி பல கனவான்கள் பல மோட்டாரில் பின்தொடர யானையும் கொடிகளும் கோவில் விருதுகளும் முன்னால் வழிகாட்ட பெருத்த ஜே சப்தத்துடன் ஊர்வலம் துவக்கப்பட்டது.

ஊர்வலம்.

ஜனக்கூட்டமானது ஊர்வலம் நடத்த முடியாத அளவு நெருக்கமாகிவிட்டதால் வெகு பிரயாசைக்கிடையில் ஜனங்களை ஒதுக்கி கடைவீதி வழியே மெதுவாய் விடப்பட்டது. வழி நெடுக இருமருங்களிலும் பெண்களும் ஆண்களும் ஜே சப்தத்துடன் தொடர்ந்துவந்ததுடன் மேடைகளிலும் மெத்தைகளிலும் மரங்களிலும் ஜனங்கள் ஏறிக்கொண்டு அங்கிருந்தே ஜே சப்தம் போட்டும் துணியை வீசியும் வரவேற்புக் குறிகாட்டின காட்சி வெகு ஆனந்தமானது. அனேகமாக கடைகள் தோறும் முக்கிய வீடுகள் தோறும் ஒவ்வொரு வளைவினிடத்திலும் பந்தலினிடத்திலும் ஊர்வலம் நிறுத்தி புஷ்ப மாலைகள் போடுவதும் பன்னீர் தெளித்து கல்கண்டு வினியோகிப்பதும் பந்தலின் நடுவில் யந்திர பொம்மைகளைத் தொங்கவிட்டு அதன்மூலம் மாலையிடச் செய்வதும் புஷ்பங்களை இறைக்கச் செய்வதுமான வேடிக்கைகள் மக்களைக் குதூகலிக்கச் செய்து கொண்டே வந்தது.

அடிக்கடி பூமாலைகளால் வண்டி நிறைந்து போனதுடன் வண்டியில் உட்காருபவர்களை தெரியவொட்டாமல் மறைக்கும் படியான அளவு மாலைகள் குவிவதுமாக இருந்தது. வாலிபர்களும் சிறு குழந்தைகளும் காட்டிய உற்சாகமும் போட்ட ஜே சப்தமும் அவர்கள் தொண்டையை மாத்திரம் மங்கச்செய்ததோடல்லாமல் பாண்டு மேள வாத்தியங்களையும் கேட்கச் செய்யாமல் மறைத்துவிட்டது. 5 மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் 8 மணிக்கு நாடார் வித்தியாசாலை மண்டபத்தை அடைந்தது.

கூட்டச் சிறப்பு.

வித்தியாசாலை ஹாலில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்ததில் கூட்டத்தின் மிகுதியால் இடம் போதாமல் போய்விட்டதால் திடீரென்று வெளியிடத்தில் மாற்ற வேண்டியதாய்விட்டது. அந்தப்படியே ஒரு பெரியயிடத்தில் அதாவது வித்தியாசாலையின் விளையாட்டு மைதானத்தில் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. நிமிஷ நேரத்தில் கூட்டத்தில் ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டார்கள். கூட்டத்திற்கு திரு கைலாசம் செட்டியார் அவர்கள் அக்கிராசனம் வகித்ததும் திருவிழாவுக்கு வர சௌகரியப்படாத பல கனவான்கள் அனுப்பிய தந்தியையும் கடிதத்தையும் வாசித்தானவுடன் அக்கிராசனர் உபசாரப் பத்திரங்களை ஒவ்வொன்றாக வாசிக்கும்படி அந்தந்த ஸ்தாபனப் பிரமுகர்களுக்கு கட்டளையிடவே அவை ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டன.


உபசாரப் பத்திரங்கள்.

விருதுநகர் பொதுஜனங்கள் முதல் தாழ்த்தப்பட்ட மக்கள் வரை சுமார் 10, 12 உபசாரப் பத்திரங்கள் வாசித்து அழகியபடம்போட்டு திரு நாடார் அவர்களிடம் கொடுத்தார்கள். திரு நாடார் அவர்கள் ஒவ்வொன்றையும் பொறுமையுடன் கேட்டு வாங்கிவாங்கி மேஜையில் வைத்துக்கொண்டே இருந்தார். அவற்றுள் மிகுதியும் நாடார் அவர்களைப் புகழ்ந்தும் அவர்களது தொண்டைப் பாராட்டியும் அவரது பதவியால் இன்னின்ன பலன் ஏற்படவேண்டும் என்று விரும்பியும் நாடார் அப்பதவியை நிர்வகிப்பதற்கு யோசனை சொல்லியும் அவரது நண்பர்கள் என்கிற முறையில் திரு. ராஜன் அவர்களையும் திரு. நாயக்கர் அவர்களையும் புகழ்ந்தும் பாராட்டியும் சுயமரியாதை இயக்கத்தை பாராட்டியும் மற்றும் பல புகழ்மொழிகள் கொண்டதாகவும் இருந்தன. அவற்றுள் ஒன்று, வகுப்புவாதத்திற்கிடம் கொடுக்கக்கூடாது என்றும், திரு ராமசாமி முதலியார் அவர்களைப்போல் திரும்பிவிடவேண்டும் என்றும் எழுதிவாசிக்கப்பட்டது. மற்றொன்று, இதை அறிந்தே இதற்குபதில் எழுதியதுபோல் தக்க ஆதாரங்களுடன் ஒவ்வொரு வகுப்புக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் ஏற்படுத்தும் முறையில் நாடார் அவர்களின் ஆட்சி நடைபெறவேண்டும் என்று கண்டிருந்தது. மற்றொன்று, அதாவது மருத்துவ குலத்தாரது பத்திரத்தில், நாடார் வித்தியாசாலையில் தங்கள் வகுப்பு மாணவர்களை சேர்த்துக்கொள்வதில்லையென்றும் அதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என்றும் கண்டிருந்தது.

திரு. நாடார் மறுமொழி.

இவைகளுக்கெல்லாம் பதில்சொல்ல திரு நாடார் அவர்கள் எழுந்து நின்றதும் கூட்டத்தில் பெருத்த ஆரவாரமும் கைதட்டலும் வெகுநேரம்வரை தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. திரு நாடார் அவர்கள் அதை அடக்கி பேச ஆரம்பித்ததும் அவ்வளவு பெரிய ஜனக்கூட்டம் உடனே நிசப்தமாய்விட்டது. திரு நாடார் ஒவ்வொரு உபசாரப் பத்திரத்திற்கும் தக்கபடி பதிலளித்ததில், முக்கியமாக வகுப்புவாரி பிரதி

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க



அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.


# குடி அரசு

ஈரோடு விபவ-ஆண்டு கார்த்திகை-மீ 10-உ


## சம்மத வயது விசாரணையின் அதிசயம்.

ஆண் பெண் மக்களின் கல்யாண வயதைப்பற்றியும், கலவி வயதைப்பற்றியும் சட்டத்தின் மூலம் ஒரு நிபந்தனை ஏற்படுத்தவேண்டி பொது மக்களின் கருத்தை அறிவதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அது பல மாகாணங்களில் விசாரணை செய்துவிட்டு இப்போது நமது மாகாணத்தில் விசாரணை நடைபெறுகின்றது.

இவ் விசாரணையின் மூலம் முடிவில் ஏற்படப்போகும் நன்மையைவிட விசாரணை நடுவில் வெளிப்படும் பல அதிசயங்கள் மக்களின் பொது அறிவிற்கு மிகவும் பயன்படுமென்று கருதுகின்றோம். விசாரணை துவக்கத்திலிருந்து நாம் மேல்வாரியாகத்தான் கவனிக்கமுடிந்தது. அநேக சாக்ஷிகள் வாக்குமூலத்தை நாம் படிக்கவே இல்லை என்றாலும் சில விஷயங்கள் வெளியானது நமது தகவலுக்கு வந்தது. அவைகளில் மிகவும் கவனிக்கத்தக்கவை என்னவெனில், பெண்கள் பக்குவமடைந்த பிறகு வீட்டில் வைத்திருந்தால் அவர்களது கற்புக்கு இடையூறு ஏற்படும் என்றும் பூப்பு அடைந்தவுடன் பெண்களுக்கு கலவி இச்சை ஏற்பட்டுவிடுகின்றது என்றும், அதற்கு உடனே பரிகாரம் செய்யாவிட்டால் மோசம் வந்துவிடும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள் இவர்கள் யார் என்று பார்த்தால் வருணாசிரம பார்ப்பனர்கள். அதாவது திரு. டி. ஆர். ராமச்சந்திர அய்யரும், திரு. எம். கே. ஆச்சாரியாரும், மற்றும் இவர்கள் போன்றவர்களுமாவார்கள். ஆனால் இவர்களால் சொல்லப்பட்ட இந்த விஷயங்கள் ஒரு சமயம் தப்பாயிருக்கலாம் என்பதாக அவர்களாலேயே ஒப்புக்கொள்ளச் செய்தாலுங்கூட மற்றொரு விஷயத்தைப் பொருத்து பெண்களுக்கு கட்டாயம் பூப்புக்குமுன்புதான் விவாகம் செய்தாகவேண்டும் என்று வாதிக்க வேறு காரணங்களையும் கொண்டவர்கள். அதாவது இந்துமத சம்பிரதாயப்படி ஏற்பட்ட வேத சாஸ்திர ஸ்மிருதிகளின்படிதான் நடந்தாகவேண்டுமே ஒழிய வேறு எந்த புது மார்க்கத்துக்கும் அது எவ்வளவு மேன்மை தரத்தக்கதானாலும் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்கின்ற கொள்கைகளாகும். மற்றும் பெண்கள் விஷயத்தில் ஆண்களைப் பொருத்த விஷயமாகமாத்திரம் அல்லாமல் பெண்கள் ஆண்களைப்போல் சொத்துடையவர்களாயிருப்பதும் கல்வி உடையவர்களாயிருப்பதும் வாழ்க்கையில் சுதந்திரம் உடையவர்களாயிருப்பதும் ஆகிய அநேக விஷயங்களிலும் மாறுபட்ட அபிப்பிராயமுடையவர்கள். இம் மாறுபாடான அபிப்பிராயத்தையும் மேல்கண்ட மதம், வேதம் சாஸ்திர ஸ்மிருதி ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டே வற்புறுத்துகின்றவர்கள்.

எனவே இந்த நிலைமையில் நமது கடமை என்ன என்று பார்ப்போமானால் இப்படிப்பட்ட விஷயத்தில் அதாவது மதம் மதம் சாஸ்திரம் ஸ்மிருதி என்னும் விஷயத்தில் உண்மையான விஸ்வாசம் கொண்டு அவைகளை பக்தி பூர்வமாய் அனுசரித்து வருகின்றவர்கள் விஷயத்தில் நாம் நிர்ப்பந்தப்படுவதைப்பற்றி சற்று யோசிக்கவேண்டியதுதான். அதுவும் அந்த விஷயத்தின் தன்மையைப் பொருத்ததேயாகும். ஆனால் இக்கனவான்கள் திருவாளர்கள் டி. ஆர். ராமச்சந்திரய்யர், எம். கே. ஆச்சாரியார் போன்றவர்கள் எவ்வளவு தூரம் மதம், வேதம், சாஸ்திரம் ஸ்மிருதி ஆகியவைகளில் விசுவாசமுடையவர்கள் பக்தி உடையவர்கள் என்பதை வாசகர்கள்தான் உணரவேண்டும். திரு. டி. ஆர் ராமச்சந்திரய்யர் ஒரு வக்கீல் வக்கீலுக்கு எவ்வளவு தூரம் வேதம் மதம் சாஸ்திரம் ஸ்மிருதிகட்குக் கட்டுப்பட்டு யோக்கியமாய் நடந்துகொள்ள சௌகரியம் உண்டு என்பதைப் பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. அன்றியும் அவர் தன்னை ஒரு வருணாச்சிரம பார்ப்பனர் என்று சொல்லிக்கொள்ளுபவர். பிராமணன் எப்படி வாழவேண்டும் என்று அவர் குறிப்பிடும் வேத சாஸ்திர ஸ்மிருதிகள் எவ்வளவு நிபந்தனைகள் விதித்திருக்கின்றனவோ அவைகளை திரு. ராமச்சந்திரய்யர் எவ்வளவு தூரம் அனுசரிக்கின்றார் என்பதையும் வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம். அதுபோலவே திரு எம். கே. ஆச்சாரியாருடைய பார்ப்பனத்தன்மையையும் ஞானத்தையும் யோக்கியப்பொறுப்பையும் நாம் வாசகர்களுக்கு தெரிவிக்கவேண்டியதில்லை. சுருக்கமாய்ச் சொன்னால் திரு ஆச்சாரியார் யோக்கியமாகவோ நாணயமாகவோ நடந்து கொண்ட சமயத்தை பார்க்கும் பாக்கியமே நமக்குக் கிடைக்கவில்லை, எனவே வேத, சாஸ்திர ஸ்மிருதிகளில் தாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப்பற்றி கவலைப்படுவது சிறிதும் இல்லாமல் மற்றவர்கள் மட்டும் எப்படி நடந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை மாத்திரம் வலியுறுத்துவதற்கு மதிப்பு கொடுக்க வேண்டுமா? அல்லது அவர்களின் யோக்கியப் பொறுப்பில் மற்றவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டுமா என்று கேட்கின்றோம். நமது நாட்டில் வேதப்பிராமணர்கள் என்பவர் பிராமணர்கள் என்கின்ற பார்ப்பனர்களிடத்தில் கொண்டாடும் பார்ப்பனர்களிடத்தில் இல்லாத எந்த அக்கிரமமாவது வேறு ஒருவரிடம் தனியாகக்காணக்கூடியது ஏதாவது இருக்கிறதா என்று கேட்கின்றோம்.

ஆகலால் எந்தப்பார்ப்பனர்களானாலும் சரி, வேதம் மதம் சாஸ்திரம் ஸ்மிருதி என்பதாக சொல்லிக்கொண்டு நம்மிடம் வந்தோ அல்லது அதைக்கொண்டுவந்து நம்நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக போட்டுவிட்டோ நிற்பார்களானால், அவர்களை லக்ஷியம் செய்யாமல் உதறித்தள்ளிவிட்டு லக்ஷியம் நாம செய்யவேண்டியவைகளை செய்து கொண்டுபோகவேண்டியது என்பதுதான் நமது யோசனையாகும், பெண்களுக்கு சொத்தும உரிமையும் பருவம் வந்த பிறகு தன்னிஷ்டப்படி காரியங்களை தெரிந்தெடுத்துக்கொள்ளும் உரிமையும் வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி பெண்களைக்கேட்டால் நியாயம் தெரியமுடியுமா, அல்லது அவர்களை அடிமையாக்கி வைத்திருப்பவர்களிடமும் அவர்களை தங்கள் சுயநலத்திற்காக உபயோகப்படுத்திக்கொண்டிருக்கின்றவர்களிடமும் கேட்டால் நியாயம் தெரியமுடியுமா என்பதையோசித்துப்பாருங்கள், எனவே அவர்களின் சொத்துரிமையைபற்றியும கணவனை தெரிந்தெடுப்பதைப்பற்றியும் இப்பொழுது இந்த வியாசத்தில் விவரிக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதி இதை விட்டு விட்டு மற்ற விஷயங்களை ஆராய்வோம்.

"ஒரு பெண் பூப்பு நிகழ்ந்தவுடன் புருஷ இச்சை அடைகிறாள்" என்றும் "பூப்பு நிகழ்ந்த பிறகு புருஷனில்லாவிட்டால் கற்பு இழக்கின்றாள்" என்றும் சொல்வதானால் பூப்பு நிகழ்ந்து 2,3,4,5 வருஷமாக கல்யாணம் இல்லாமல் இருக்கும் பெண்கள் எல்லாம் கற்பு இழந்திருப்பார்கள் என்றுதானே கொள்ள வேண்டும்.

அப்படியானால் கல்யாணம் ஆகி பூப்பு நிகழும் முன்போ பூப்பு நிகழ்ந்து புருஷனுடன் கொஞ்சகாலமோ அதிக காலமோ வாழ்ந்த பிறகோ புருஷனை இழந்த பெண்கள் விஷயத்தில் என்ன நினைப்பது என்பதற்கு இவர்கள் என்ன சமாதானம் சொல்லுவார்கள் என்றுதான் கேட்கின்றோம் ஒரு சமயம் மேல் குறிப்பிட்ட விதவைகள் என்பவர்களை இவர்கள் கற்பு இழக்க முடியாமல் பந்தோபஸ்தாக வைத்திருப்பதாக சொல்லுவார்களானால் அந்தப்படியே இந்த இளம் குழந்தைகளையும் பந்தோபஸ்தாக வைத்திருப்பதில் என்ன கஷ்டம்? விதவைகளை பந்தோபஸ்தாக வைப்பதை விட குழந்தைகளை பந்தோபஸ்தாக வைப்பது வெகு சுலபம் என்றே சொல்லுவோம். ஏனெனில் "கற்பை கெடுத்துக் கொள்ள" விதவைகளுக்கு இருக்கும் சவுகரியம் குழந்தைகளுக்கு இல்லை. அன்றியும் அவர்களை பந்தோபஸ்தாக வைத்திருக்க வேண்டிய அத்தனை காலம் அதாவது அவர்கள் சாகும் வரை வைத்திருப்பதை விட குழந்தைகளை 2, 3, வருஷம் மாத்திரம் வைத்திருந்தால் போதுமல்லவா? அப்படிக்கில்லாமல் ஒரு சமயம் விதவைகள் விஷயத்தில் எப்படி போனால் போகட்டும் என்று விட்டு விட்டு இரு

க்கின்றோம் என்பார்களானால், இவர்களுக்கு இந்தக் குழந்தைகள் விஷயத்தில் அந்த நியாயம் ஏன் பாதிக்குமோ தெரியவில்லை. விதவைகள் என்பவர்களும் குழந்தைகள் சகோதரிகள் என்கின்ற முறையுள்ளவர்கள் தானே? இவைகளெல்லாம் எடுத்துச் சொல்லுவது மிகுதியும் ஆபாசமான விஷயங்கள் என்றாலும் நம் நாட்டில் பார்ப்பனர்கள் என்பவர்கள் எவ்வளவு தூரம் மனிதத்தன்மைக்கும் முற்போக்குக்கும் இடையூறான கொள்கைகள் கொண்டவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை தெரிவிக்க வேண்டியே இவற்றை குறிப்பிட்டுத் தீர வேண்டியிருக்கிறது. இவர்கள் தங்கள் நடவடிக்கைகளைப் பற்றி கவனம் செலுத்தாமல் பெண்கள் விஷயத்தில் மாத்திரம் இப்படி அநியாயமான நிர்ப்பந்தங்கள் சுமத்தப்படுவதை பார்க்கும் போதும் பெண்களை அடிமைப்படுத்திக் கொடுமைப் படுத்த மாத்திரம் வேதமும் சாஸ்திரமும் கையாளப்படுவதைப் பார்க்கும் போதும் இதற்கு சமாதானமாக நியாயங்கள் சொல்லிக் கொண்டிருப்பது வீண் காலதாமதமும் உபயோகமற்ற வேலையும் ஆகும் என்பதுதான் நமது முடிவான அபிப்பிராயம் ஏனெனில் எந்தக் காரணத்தைக் கொண்டும் இக்கூட்டத்தாரை திருத்த முடியவே முடியாது ஏன் என்றால் எல்லாம் தெரிந்தே வேண்டுமென்றே செய்பவர்கள் மற்றபடி ஏதாவது செய்ய வேண்டுமானால் எதேச்சாதிகாரத்துடன் சட்டம் செய்யும் சக்தி உள்ள ஒரு அரசாங்கத்தை தோற்றுவிக்க வேண்டும் அப்படிச் செய்ய முடியாவிட்டால் எல்லாவிதக் கட்டுப்பாட்டையும் அடியோடு உடைத்தெறிய ஏற்பாடு செய்ய வேண்டும் அப்படிக்கில்லாமல் செய்யும் முயற்சிகள் எல்லாம் வீண் "கொக்குப் பிடிக்கும்" முயற்சியே யாகும்.

கொஞ்சநாளைக்குப் முன்பு பெண்கள் விடுதலையை நாடிக்கொண்டு சித்திர புத்திரனால் "கற்பு" என்னும் ஒரு வியாசமும் "பெண் விடுதலை வேண்டுமானால் ஆண்மை அழிய வேண்டும்" என்று ஒரு வியாசமும் எழுதப்பட்டதை வாசகர்கள் படித்திருக்கலாம் அதைப் பற்றி பல நண்பர்கள் தங்கள் கசப்பையும் தெரிவித்தார்கள் ஆனால் அதில் கண்ட ஒரு அபிப்பிராயத்தையே இப்போது சர் பி. சிவசாமி அய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனர் ஒருவாறு தெரிவிக்கின்றார் அதாவது "பெண்கள் பிள்ளை பெறுவதை மட்டுப்படுத்த வேண்டும்- என்பதைப் பற்றி இவர் சமீபத்தில் பெங்களூரில் சர் விஸ்வேஸ்வரய்யாவின் தலைமையில் பல பெரியோர்கள் முன்னிலையில் செய்த ஒரு உபந்நியாசத்தில் பேசியிருக்கின்றார், ஆனால் பெண்கள் பிள்ளை பெறுவதை கட்டுப்படுத்துவதற்கு அவர் சொல்லி இருக்கும் சாதனம் என்ன வென்றால் கலவியில் பெண்களை ஒருவித கருவியை உபயோகப்படுத்திக் கொள்ளும்படி யோசனை சொல்லி இருக்கின்றார். நாம் சொல்லும் விஷயங்கள் சிற்சில சமயங்களில் சிலருக்கு அதிசயமாகவோ அல்லது வேறு பொறுப்பற்றதாகவோ காணப்படுவதை நாம் ஒருவாறு உணருகின்றோம்.

ஆனாலும் அப்படிப்பட்டவர்கள் கலகங்களுக்கு நாம் ஒருவர் மாத்திரம் தனியாய் தோன்றிக் கொண்டிருக்கும்படி இல்லாமல் அவர்களாலேயே மதிக்கத்தக்க வேறு சிலரும் நம்மோடு சேர்ந்து தோன்றி விடுகின்றார்கள் என்பது நமக்கு சில சமயங்களில் ஆறுதல் உண்டாக்கி வருகிறது-

## மலையாளத்தில் பார்ப்பனீயம்

பார்ப்பனீயத்திற்கு அடிப்படையாகவுள்ளது மலையாளமென்பதும் பார்ப்பனீய ஆதிக்கம் அதிகமாகவுள்ளது மலையாளமென்பதும் யாவரும் அறிந்த விஷயங்களாகும் எனினும் தாழ்த்தப்பட்டோர் கல்வி கற்று சிறந்து விளங்குவதும் மலையாளமே இதற்குக்காரணம் பல்லாண்டுகளாக உழைத்து வரும் பாதிரி சங்கங்களாகும் இரட்சண்யசேனை லண்டன் மிஷன் முதலிய பல கூட்டத்தார் மிகுந்திருப்பது திருவாங்கூரிலேயே கணக்கற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அங்கு கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றி ஒழுகி வருவது யாவரும் அறிந்த விஷயமாகும் எனவே சுருங்கக்கூறுமிடத்து அன்னிய நாட்டினர் ஆங்கு குடியேறி கல்வியைப் பரப்பாவிடில் அங்குள்ள தாழ்ந்த வகுப்பினர் சிறிதேனும் ஒருபோதும் முன்னேறி யிருக்கமாட்டார் என்பது திண்ணம்.

தம் மதம் பரப்ப வந்த இச்சங்கத்தினர் தாழ்த்தப்பட்டோரின் உண்மை நிலையறிந்து ஆங்காங்கே பள்ளிகளை நிறுவி கல்வி கற்பித்தவர் ஆரம்பக்கலாசாலைகள் மட்டுமன்றி உயர்தரக்கலா சாலைகளையும் கல்லூரிகளையும் அவர்கள் நிறுவியிருக்கின்றனர் அவர்கள் இவ்விஷயத்தில் செய்திருக்கும் அரிய தொண்டு அளவிடற்கரியதாகும் பெண்பாடசாலைகளும் திறவப்பட்டிருக்கின்றன இவ்வுழைப்பின் பலனாக இன்றைக்கு பல தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உயர்தர உத்தியோகங்களிலமர்ந்திருக்கின்றனர் அவர்களது வழக்க ஒழுக்கங்களும் செம்மைப்பட்டு விட்டன

கிறிஸ்தவர் தம் மதம் பரப்ப அங்கு வாராதிருந்தால் இவர்களது நிலை முன் போலவே இருந்திருக்கும் மேல் ஜாதியினர் அவர்களுக்கு கல்வி கற்பித்திருக்கமாட்டார் பல்லாயிரக்கணக்கானவர் கிறிஸ்துவராய் விட்டனர் எனக்குறைகூறும் பார்ப்பனரும் சைவரும் பிறரும் இன்றாவது உண்மை தெளிந்தபிறகாவது அவர்களைத் தம் வீதி வழியாகப் போகவும் கோயில்களிற் புகவும் சம்மதிக்கின்றனரா? இல்லையே அவர்களது மதி இருந்தவாறென்னே பொது ஜனங்களுடைய பணத்தால் போடப்பட்ட வைக்கம் ரோட்டில யாவரும் போகலாம் என்ற முடிவு வருவதற்காக எத்தனை தொண்டர்கள் பசியால் வாடினர் பனியால் நனைந்தனர் பிறகொடுமைகட்குட்பட்டனர் அதன் முடிவென்னாயிற்று இதைப்பின்பற்றியாவது பிறரும் உண்மை தெளிந்தனரா? இல்லையே சுசீந்திரத்திலும் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டியதாயிற்று அங்கும் போகவிடவில்லை தற்பொழுது வடவீசுவரத்தில் ஆதித்திராவிடரும் நாடார் முதலானோரும் போகலாமென அநுமதிக்கப்பட்டிருக்கின்றனராம் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் வேற்றுமையின்றி ஒரு வகுப்பில் ஒரே பெஞ்சியில் சகல ஜாதிமாணவர்களும் சமமாய் உட்கார்ந்து படிக்கின்றனர் அதற்கு தீட்டொன்றுமில்லை ஒரு பிராமணப் பையனும் சைவ வைணவப் பையனும் அங்கு போய் படிக்கமாட்டேனெனக் கூறவில்லை தாய் தந்தையரும் அனுப்பியே வருகின்றனர் ஆனால் அவர்களை வீதியில் நடக்கமட்டும் சம்மதிக்கிறார்களில்லை கோயில் சங்கதி பிற்பாடு இதில் ஆழ்ந்திருக்கும் தத்துவந்தானென்னே இது ஒரு சமயத்துக்கொரு நீதியாகவே இருக்கின்றது என்னே பார்ப்பனர் நியாயம்!

உண்மை விளம்பி.

## திரு நாயக்கர்.

25ந் தேதி இரவு ஈரோட்டிலிருந்து தென் இந்திய சீர்திருத்தக்காரர்கள் மகா நாட்டுக்காக சென்னைக்குப் பிரயாணமாவார் 28ந் தேதி ஈரோட்டிற்கு திரும்பி வரக் கூடும்.

## சென்னிமலையில் சுயமரியாதைத் திருமணங்கள்-

கார்த்திகை மாதம் 4ந்தேதி 19-11-28 ல் திரு செ, ராமசாமி முதலியாரது குமாரத்தியின் கல்யாணமும் திரு வையாபுரி முதலியார் மகன் லக்ஷ்மண முதலியாரின் கல்யாணமும் பிராமணர்களை நீக்கிச் செய்யப்பட்டன. முறட்டுப்பாளையம் கோவில் ஸ்வாமிகள் திருச்செங்கோடு ஸ்ரீதர ஸ்வாமிகள் சு. பாலசுப்ரமண்ய முதலியார் மற்றும்பொதுஜனங்களும் வந்துகூடி திருமணத்தை இனிது நடத்தி மணமக்களை ஆசீர்வதித்து தாம்பூலம் பெற்று சென்றனர்.

நா. முத்துசாமி,

ஜவ்வாதுபுரம் அருப்புக்கோட்டைக்குச் சுமார் 3 மைல் தூரத்திலுள்ள ஜவ்வாதுபுரத்தில் சுயமரியாதை வீரர் திரு. பொன்னையா உபாத்தியாயர் அவர்களுக்கும் திருவளர்ச்செல்வி செல்லம்மாளுக்கும் பார்ப்பனீயமின்றி சுயமரியாதைத் தொண்டர் திரு. கருப்பையா பிள்ளை அவர்களால் தமிழிலேயே திருமணம் நடத்தி வைக்கப்பெற்றது. திரு. தி. அ. வெங்கிடசாமி ரெட்டியார் அவர்களால் மங்களப் பாட்டு பாடப் பெற்றதும் பெரியோர்களால் மணமக்கள் ஆசீர்வதிக்கப் பெற்றனர்.

## கூத்தூர் போர்டு முகமதிய பாடசாலை,

தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் எ, அப்பா பிள்ளை அவர்கள் செவ்வனே பாடசாலையை நடத்திவருவதோடு ஆதிதிராவிட மக்களை பாடசாலையில் சேரும் வண்ணம் முயற்சி செய்ததில் இது வரையில் சுமார் எட்டு பையன்கள் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர். பிள்ளையவர்கள் விடா முயற்சியோடு இருப்பார்களென நாம் நம்புகிறோம்.

நிருபர்,

9ம் பக்கத் தொடர்ச்சி

கிறித்துவத்தைப்பற்றி குறிப்பிட்டதற்கு பதில் சொல்லும்போது, வகுப்புக்கவலையும் சம உரிமை ஆசையும்தான் தமது குலமக்களின் பெருமையை உலகமறியச் செய்தது என்றும், இக்கொள்கை வேட்கை தமது சமூகத்தாருக்கு ஏற்படும்முன் இருந்த நிலைமையும் அது ஏற்பட்டபிறகு தற்காலம் ஏற்பட்டுவரும் நிலைமையும் தங்கள் வகுப்புமாத்திரமல்லாமல் மற்றும் பல ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்கும் கண்விழிப்பும் விடுதலையும் சுயமரியாதையும் ஏற்பட்டுவருவதையும்பற்றிவிஸ்தாரமாயும் ஆண்மையுடனும் சொன்னதுடன் திரு. வ. இராமசாமி முதலியார் அவர்களைப்போல் தன்னால் நடக்க முடியாது என்றும், அவர் உலகப்புகழை அடையவேண்டிய ஆசையுடைய அவ்வளவு பெரியவர் என்றும், தனக்கு அவ்வளவுவேண்டியதில்லை என்றும், மக்களால் துன்பப்படுத்தப்பட்ட மக்களை அதிலிருந்து விடுவித்து எல்லா மக்களும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் சுயமரியாதையும் அடையும் வழியில்தான் தனது வாழ்நாள் முழுவதையும் செலவழிக்க முடியும் என்றும், அதனால்தனக்கு எவ்வளவு கெட்டபேர் வந்தாலும் வரட்டும் என்றும், தான் ஒரு சுயமரியாதை தொண்டன் என்றும், சுயமரியாதை இயக்கத்தால்தான் தனது நாட்டுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் விடுதலை ஏற்படும் என்று நம்புகின்றவர் என்றும் சொன்னதுடன் அடுத்தாப்போல் மருத்துவகுல பத்திராதிபருக்கு மிகவும் அன்பான இரக்கமான வார்த்தைகளால் தனது அநுதாபத்தை காட்டிவிட்டு தனது சமூகத்தார் ஏற்படுத்தியிருக்கும் பள்ளிக்கூடத்தில் மருத்துவகுலப் பிள்ளைகளைப் படிக்க அனுமதிப்பதில்லை என்பதைக் கேட்கத்தான் மிகவும் அவமானப்படுவதாகவும், அப்பள்ளிக்கூடத் தலைவர்கள் இனி அப்படிச் செய்யக்கூடாது என்றும் சொன்னதோடு உடனே இந்தக் கொடுமை செய்வதை மாற்றிக் கொள்ளாவிட்டால் தங்கள் சமூகத்தை வேறொரு சமூகத்தார் கொடுமைப் படுத்துகின்றார்கள் என்று சொல்லுவதில் அர்த்தமும் யோக்கியப் பொறுப்பும் இல்லை என்றும் சொன்னார். பிறகு திரு நாயக்கரை சில வார்த்தைகள் சொல்லும்படி அக்கிராசனர்கள் கட்டளை இட்டதும்,

திரு நாயக்கர்.

திரு. நாயக்கர் எழுந்து தன்னை இக்கூட்டத்திற்கு அழைத்ததற்கும் தன்னையும் நாடாருடன் சேர்த்து ஆடம்பரத்துடன் வரவேற்றதற்கும் இன்று பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்கும திரு. செந்தில்குமார நாடார் திரு, வி.வி. ராமசாமி நாடார் முதலியவர்களுக்கும் அக்கிராசனர் திரு. கைலாசம் செட்டியார் அவர்களுக்கும் நன்றி செலுத்திவிட்டுப் பேசியதாவது:—

கனவான்களே சில உபசாரப் பத்திரங்களிலும் திரு. சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் வாக்கியங்களிலும் இப் பதவி அவருக்கு கிடைத்ததற்கு திரு, ராஜனும் நானும் பொறுப்பாளிகள் என்று கண்டிருக்கிறது. அதை நான் ஒருவாறு வணக்கத்துடன் மறுக்கின்றேன். திரு. ராசன் அவர்கள் பொறுப்பாளி என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை, உங்களோடு சேர்ந்து நானும் அவருக்கு நன்றி செலுத்துகின்றேன், ஒருவிதத்தில் நான் எப்படி பொறுப்புடையவன் என்றால் திரு. சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் தம்முடைய மற்ற காரியங்களையும் தொண்டுகளையும் கெடுத்துவிடும் எனக்கருதி தமக்கு இப்பதவி வேண்டாம் என்று சொல்லிமறுத்துவிட்டபோது, நான் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்று உத்ற நண்பர் என்கின்ற முறையில் அவருக்குக் கட்டளை இட்டு கட்டாயப் படுத்தினேன். அதைத் தவிர எனக்கு வேறு சம்பந்தம் கிடையாது. ஆகையால் அப்புகழுரைகள் திரு. ராஜன் அவர்களுக்கே உரியது. இந்த சந்தர்ப்பத்தில் திரு. நாடார் அவர்களுக்கு நான் சொல்லுவதெல்லாம், இந்த ஜில்லாபோர்டு பதவியை நிர்வகிப்பதில் எல்லோரையும் திருப்திபண்ண வேண்டும் என்றாவது எல்லோருக்கும் நல்ல பிள்ளையாகவேண்டுமென்றாவது கருதிக்கொண்டு ஒரு காரியமும் செய்யவேண்டாமென்றே சொல்லுகிறேன்.

ஏனெனில், அது முடியாத காரியம்- ஒரு சமயம் முடிவதாயிருந்தாலும் அது யோக்கியமான மனிதனின் காரியமாகாது. ஒரு சமயம் யோக்கியமான மனிதனுக்கும் சாத்தியப்படுமானாலும் அதனால் நன்மையை விடக் கெடுதியே அதிகமாகும். மக்களில் பலதிறமுண்டு- யோக்கியனும் அயோக்கியனும் உண்டு- இருவரையும் திருப்தி செய்யக் கருதுவது நாணயமாகாது. ஆதலால், அடியோடு கஷ்டப்படுகின்றவர்களுக்கு நன்மை செய்வதின் மூலம் சுகப்படுபவர்களுடைய ஆசையும் அனுபவமும் சற்று குறைந்தாலும் குற்றமில்லை. நான் பொதுவாக இம்மாதிரி பதவி பெறுபவர்களைப் பாராட்டுகிற வழக்கமில்லை- ஆனால் திரு. நாடாரைப் பாராட்டுகின்ற காரணம் எல்லாம் அவர் கொடுமைப்படுத்தப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரினும் அதிகமாய் கொடுமைப் படுத்தப்பட்ட மக்கள் ஏராளமாய் நமது நாட்டில் வதைக்கப் படுகின்றார்கள் என்றும் அவர்களுக்கு விடுதலையும் சாந்தியும் ஏற்பட கொடுமையை அனுபவித்த ஒருவருக்கு பதவி கிடைப்பது அனுகூலமானதென்றும் அந்த வழியில் நாடார் மன உறுதியோடு உழைப்பார் என்றும் நம்பி அவர் அடைந்த பதவியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏற்படப் போகும் நன்மையை உத்தேசித்து அவர்களைப் பாராட்டும் முறையில் இவர்களைப் பாராட்டுகின்றேன் என்றும்திரு நாடார் அந்தத் துறையில்உறுதியுடன்நின்று இந்தக்காரியத்தை நடத்தத் தாட்சண்யமோ பயமோ சுயநலமோ பொது ஜனங்களிடம் கீர்த்திபெற முடியாதே என்கின்ற சந்தேகமோ தோன்றுமானால் தயவுசெய்து அந்த க்ஷணமே அந்தவேலையை இராஜிநாமாக் கொடுத்துவிட்டு வெளியில் வந்து இப்போது செய்கின்ற தொண்டே செய்யவேண்டுமென்றும்சொல்லுகின்றேன்என்றும்சொன்னார்- பொது ஜனங்களும் ஆம் ஆம் என்று ஆரவாரம் செய்தார்கள், திரு. நாடாரும் அதை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியைக் காட்டினார்- பிறகு அக்கிராசனர் அவர் சொன்னதை ஆமோதித்து அதை அனுசரித்தே மேலும் பேசினார்- திரு வி வி ராமசாமி நாடார் வந்தனம் செலுத்த கூட்டம் 9...30 மணிக்கு முடிவுற்றது. பிறகு அங்கேயே ஒரு பெரிய விருந்து நடந்ததும் திருவாளர் நாடார் ராஜன் நாயக்கர் முதலியவர்கள் நேரே மதுரைக்குப் புறப்பட்டு விட்டார்கள்,

ஒரு நிருபர்-

## சென்னை கவர்மெண்ட் அறிக்கை.

1929-ஆம் வருடம் ஜுலை ஆகஸ்டு மாதங்களில் லண்டன்மாநகரில் இண்டியன் சிவில் சர்வீஸ் போட்டிப் பரீக்ஷை நடைபெறும். அபேக்ஷகர்களின் வயது, 1929 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று 21 க்கு குறையாமலும் 24 க்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். அபேக்ஷகர்களின் விண்ணப்பங்கள் 1929 ஆம் வருடம் மே மாதம் 15 ம் தேதிக்குள் "காரியதரிசி, சிவில் சர்வீஸ் கமீஷன், 6 பர்லிங்டன் கார்டன்ஸ் லண்டன் W.I." என்ற விலாசத்துக்கு போய்ச் சேரவேண்டும். விண்ணப்ப பாரங்களும்மற்ற விபரங்களும் "டைரக்டர் ஆவ்பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்" என்ற் விலாசதாருக்கெழுதிப்பெற்றுக் கொள்ளலாம்- விபரமான சட்ட திட்டங்களும்பாடவிபரங்களும்போர்ட்செய்ண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்கப்படும்,

H. G. ஸ்டோக்ஸ்.
சீவ்செக்ரடரி.

## கூத்தூரில் சுயமரியாதை சபை ஸ்தாபனம்.

இச்சபை பஜனை சபையினர்களால் நிறுவப்பட்டிருப்பதாக தெரிந்து நாம் மகிழ்வடைகின்றோம்.

நிருபர்.

## முசிரி தாலூகா போர்டு தலைவர் தேர்தல்-

முசிரி தாலூகாவிலுள்ள முருகூர் பெருநிலக்கிழவரும் செல்வத் திருவாளருமாகிய திருமிகு R. M. A. R. இராமசாமி பிள்ளையவர்கள் முசிரி தாலூகா போர்டு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கனம் பிள்ளையவர்கட்கு துறையூரில் 2 நாட்கள் டீபார்ட்டியும் நல்லுபசாரணைப் பத்திரமும் கொடுக்கப்பட்டன. பொது விஷயத்தில் பிள்ளையவர்கள் ஊக்கமுள்ளவர் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய பிள்ளையவர்கள் பல்லாண்டு வாழ்க.

மாரியண்ணன்.


## "தெய்வீகன்"

நந்த, மலய, சுருதி மன்னர் என்னும் முப்பிரிவினையுடைய பார்க்கவ குலத்தினர் நலங்கருதி உழைக்கும் மாதத்தாள். புத்தக அளவில், நாற்பது பக்கங்களில், பல அரிய பொருள்கொண்டு மிளிர்வது.

மார்கழி முதல்நாள்தொட்டு திங்கள்தோறும் திகழ்வது.

வருட சந்தா ரூ. 2—0—0

ஆசிரியர் மே. வே. துரைசாமி உடையார்,
விலாசம்:— "தெய்வீகன்" நிலயம்,
பொன்மலை.

## சென்னை நகரசபைத் தலைவர் ராமசாமி முதலியாருக்கு வாழ்த்து-

"சென்னை பார்ப்பனரல்லாதார் இளைஞர் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியின் விசேஷகூட்டமொன்று ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் சென்னை கார்பொரேஷன் தலைவராக தேர்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு சந்தோஷம் தெரிவிக்கும் பொருட்டு ஸ்ரீமான் எஸ். ஆர். தர்மலிங்கம் பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் இராம விலாஸ் டிஸ்பென்ஸரியில் 17உ காலை பத்துமணிக்கு கூடிற்று- அச்சமயம் கமிட்டி அங்கத்தினர் பலரும் விஜயம் செய்திருந்தனர்- கீழ்கண்ட தீர்மானம் அக்கிராசனரால் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டது.

ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் சென்னை கார்பரேஷன் தலைவர் தேர்தலில் அடைந்த வெற்றியை இச்சங்கம் பாராட்டுவதுடன் அதற்காக அவருக்கு தனது மன மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்ளுகிறது"

மேற்கண்ட தீர்மானத்தை தந்தி மூலமாய் அவருக்கு தெரிவிக்கவும் தீர்மானிக்கப் பட்டதென்று காரியதரிசி எழுதுகிறார்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சொல்லப்படுவது. 2-வது வார்டில் பழைய நியமனச் சீட்டுடன் தேர்தல் நடத்தப்பட்டால், திரு. வேணுகோபால் பிள்ளையின் நியமனச் சீட்டு ரத்தாகின்றது. இப்பொழுதுள்ள லெஜிஸ்லேடிவ் சாஸ்திரி கட்சியைச் சேர்ந்தவர் அபேக்ஷகராக வந்துவிடலாம். அவ்வார்டிலேப் புது நியமனச் சீட்டுகள் வாங்கப்பெற்றாலோ, திரு. வேணுகோபால் பிள்ளை அவர்களின் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அபேட்சகராக ஏற்பட்டு அவர் வெற்றியடைதற்கு ஏதுவிருக்கின்றது. இதனால் பார்ப்பனரல்லாதார் கட்சிவலுவடையும், பார்ப்பனக்கட்சியின் வலிமை குறையும்- இச்சூழ்ச்சி பார்ப்பனச் சாத்தானுய திரு. இராமையா சாஸ்திரிகளுக்கும் மிகநன்றாய்த்தெரியும். லோகல் செல்ப் கவர்ன்மெண்டு திரு- இராமையா சாஸ்திரி- இப்பொழுது மெம்பர் சேர்மன் திரு. சீனிவாசசாஸ்திரியை ஆதரிக்காமல் இருக்கமுடியுமா? ஆகையினால்தான் கோர்ட்டு ஆர்டரையும் மீறி பழைய நியமனச் சீட்டுகளுடன் 2-வது வார்டு தேர்தல் நடைபெற வேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது- இவ்வக்கிரமங்களை லோகல்செல்ப் கவர்ன்மெண்டு காரியதரிசியும், மந்திரியும் விசாரணை செய்து நியாயம்பிறப்பிக்கக் கூடாதா?

ஒரு முனிசிபாலிட்டியில் பார்ப்பனர்களும், பார்ப்பன உத்தியோகஸ்தர்களும் ஒன்று சேர்ந்துகொண்டு பார்ப்பனரல்லாதார் முன்னேறுதற்கு இவ்வளவு அக்கிரமம் செய்வார்களாயின், நாம் ஏன் உத்தியோகங்களெல்லாம் பார்ப்பனரல்லாதார் மயம் ஆக்கப்படல் வேண்டுமென்று சொல்லக் கூடாது?

"திராவிடன்"

## பர்தாவின் கொடுமை

மகம்மதியப் பெண்கள் சுதந்திரம் பெற வேணுமானால் பர்தா என்னும் கோஷாவை நீக்கி ஆகவேணும். இந்த மூடபழக்கத்தினால் அடையும் லாபம் ஒன்றுமில்லை. உதாரணமாக வேறு எந்த மதத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் பெண்கள் கல்வியில் தேர்ச்சியடைந்திருக்கின்றார்கள். நமது பெண்களோ அப்படி கற்க வழியில்லை. ஏனென்றால் பர்தா என்னும் மூடவழக்கத்தினால் அவர்களுக்கு லௌகிக கல்வி கற்க இடமில்லை. இம்மதத்தார்தான் கல்விகற்கவேண்டும். இம்மதத்தார் கல்வி கற்கவேண்டாமென்று எந்தசாஸ்திரமும் கூறவில்லை, அப்படி சாஸ்திரத்தை ஏற்படுத்திக்கொண்டோமேயானால் அந்த சாஸ்திரம் என்பது கடவுள்தான் ஏற்படுத்தியிருக்கவேண்டும். அப்படி கடவுள் ஏற்படுத்தியிருந்தால் சீமான்களுக்கு வேறு சாஸ்திரமும் ஏழைகளுக்கு வேறுசாஸ்திரமும் 'கடவுள்' ஏற்படுத்தமாட்டார். கடவுளிடத்தில் வஞ்சகம், பொறாமை என்பது இல்லை. எண்பத்து நாலு லட்சம் ஜீவராசிகளையும் ஒரே விதமாகத்தான் பரிபாலித்து வருகிறார். இல்லாமல் மெக்கு மாத்திரம் அந்த பர்தா சாஸ்திர மென்று எடுத்துக்கொண்டால், ஒரு ஏழை இஸ்லாமுடைய மனைவியானவள் தன்னுடைய புருஷன் உள்ள பிரியத்தால் அந்த பர்தா வென்னும் மூடபழக்கத்தினாலேயே இருந்து காலம் கழிக்கின்றாள். அந்த அம்மாளுடைய புருஷன் மரணம் அடைந்தவுடன் அவளுடைய கதி இன்னதென்று சொல்ல இடமில்லை. பாருங்கள் பரிதாபம், சிறிதுகாலம் பர்தாவிலேயே இருந்து காலத்தை கழித்ததைப்போல் இப்பொழுது கழிக்க வழியில்லை. அந்த கோஷாவென்னும் பர்தாவில் இருந்துகொண்டால் தன்னுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு ஒரு வழியுமில்லை அந்த அம்மாளானவள் பர்க்காவை போட்டுக்கொண்டு கூலி ஜீவனம் செய்வதற்கு புறப்படுகிறாள். அப்பொழுது அவளுடைய கதி என்னவென்று பாருங்கள். இப்படியே சீமானுடைய மனைவியையெடுத்துக்கொண்டால் அவள் தன்னுடைய சீமான்தனத்தினால் அந்த பர்தாவிலேயே இருந்து காலத்தை கழித்துகொள்ளுகின்றாள். ஏழைகளுடைய மனைவிகளோ அப்படி இருப்பதற்கு ஏதுவாகிய வழியில்லை. பாருங்கள்! கடவுள் இப்படியும் சாஸ்திரத்தை ஏற்படுத்தி இருப்பாரா? இல்லை. நம் சகோதரர்கள் இதை எல்லாம் கவனியாமல் கூண்டு புலியை இருப்புக்கூட்டில் அடைத்து வைத்தாற்போல் நமது பெண்களையும் பர்தா என்னும் கூண்டினில் அடைத்து வைத்திருக்கின்றார்கள். இதுவென்ன அநியாயம்! கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். இதைவிட்டு நமது பெண்களை விருத்தி செய்து லௌகிக கல்வியில் விருத்தியடைய செய்யுங்கள்'

எஸ் கே அப்துல் அஜீஸ் சாயபு,

11—11—28 சிறுமுகை,

ஆண்மையென்பது பெண்களை அடிமையாக்குவதல்ல.

## மதிப்புரை.

கம்ம சரித்திரச் சுருக்கம் என்னும் புத்தகம் நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இந்நூலை இயற்றினர் திரு சு. வேங்கடசாமி நாயுடு அவர்கள். இவர் சமூக முன்னேற்றத்திலும் சுயமரியாதை இயக்கத்திலும் முன்னேறமடைந்தும், ஏனையோர்களை முன்னேற்றமடையும்படியான செய்கைகளில் முனைந்தும் இருக்கிறார் என்பதற்கு இக்கம்ம சரித்திரச் சுருக்கம் என்கிற நூலே சான்றாகும். கம்மவார் சரித்திரங்கள் 3, 4 போல இதற்குமுன் எழுதப்பட்டிருந்தாலும், அவைகளில் காணப்படுவதைவிட இச்சரித்திரத்தில் மிக நுட்பமான ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதோடு மக்கள் முன்னேற்றத்திற்கு வேண்டியவைகள் பல தெளிவாக எளிய நடையில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதற்கு திருவாளர் வி. இராமசாமி நாயுடு அவர்கள் முகவுரை ரத்னமுடி சூட்டியதுபோல் மிளிர்கின்றது. அதாவது, அவர் தமது முகவுரையில் 'பண்டை வரலாறுகளையறிதல் பிற்கால முன்னேற்ற முயற்சியைக்கிளப்பப் பெருந்துணை செய்வதாகும்" என்பதற்குச் சான்றாக ஆந்திர க்ஷத்திரியர் என்று கம்மவார்களை சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, செலுத்தகாசர்கள் என்பதாக பொருள், அரசு செலுத்துவது நம்முயிர்போல் மன்னுயிரைப் பாதுகாத்தலாம், இத்தகைய நினைவு நம்களில் ஒவ்வொருவருக்கும் உண்டாகும்போது தன்னுடைய சமூக முன்னேற்றமும் சுயமரியாதையும் உண்டாகி நாட்டைச் செழிப்பிக்கும் என்பதில் ஐயமின்று. ஆகையால் இந்நூலை ஒவ்வொரு குலாபிமானியும் வாசித்தறியவேண்டியது முக்கியமென நம்புகிறோம்.

கிடைக்கும் இடம்.—

திரு. வி. இராமசாமி நாயுடுகாரு,

ஆனந்த போதினி ஆபீஸ், சென்னை

## விளம்பரம்.

ஈரோடு தாலூகா அனுமந்தபள்ளி கிராமம் மதுரா கொளத்தூரிலிருக்கும் கருப்பண கவுண்டர் மக்களாகிய ராமசாமிக் கவுண்டன் 1. நாச்சிமுத்துக் கவுண்டன் 2, ஆகிய நாங்களிருவரும் சகல மகாஜனங்களுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், எங்கள் தகப்பனர் கருப்பண கவுண்டருக்கு சுமார் 70 வயதாகிறது. அவருக்கு வயது மீறியதால் சுமார் இரண்டு மூன்று மாதமாக சித்த ஸ்வாதீனமில்லாமலிருந்து வருகிறார்- அவரை வேண்டுமென்றே ஏமாற்ற யாராவது அவரிடம் சுதந்தர சொத்துக்களின் பேரிலாவது, ஸ்தாவர சொத்துக்களின் பேரிலாவது, கடன் கொடுத்தோ, கடன் கொடுமிசை எழுதி வாங்கியோ எவ்வித மான தஸ்தாவேஜுகள் செய்தாலும் அது செல்லத்தக்கதல்ல என்பதை டிபாரின் நேர் வாரிசுகளாகிய நாங்கள் இதனால் யாவருக்கும் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம்.

இராமசாமிக் கவுண்டன்,

நாச்சிமுத்துக் கவுண்டன்.

## சுயமரியாதைத் திருமணங்கள்.

கும்பகோணம் 4—11—28 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஈபோ திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு அவர்களுக்கும் தம்பீனில் உள்ள சுயமரியாதை வீரர் திரு- ஆர் வி- சடகோப நாயுடு அவர்களின் தமையனார் புத்திரி திரு. கோகில நாயகி அம்மாளுக்கும் கும்பகோணத்தில் பார்ப்பனீயம் ஒழிந்த சுயமரியாதைத் திருமணம் இனிது நடைபெற்றது. இத் திருமணம் சுயமரியாதை முறையில் நடைபெற்றதற்கு முக்கிய காரணஸ்தராக இருந்தவர் திரு. பி. வி. சடகோப நாயுடு அவர்கள், என்பதைமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒருநிருபர்.

மலாயா நாட்டில் கோலக்கங்சாரில்-பேரா இந்து மகாஜன சங்கத்தின் அங்கத்தினராகிய திரு. கே. பி. நாராயணசாமி அவர்களுக்கும், தைப்பிங் திரு. பெரியண்ண மேசனார். புத்திரி சௌபாக்கியவதி அன்னம்மாளுக்கும், 26—10 – 1928 வெள்ளியன்றும், ஷை சங்கத்தின் அங்கத்தினராகிய திரு. முத்தராக்கு அவர்களின் குமாரர் திரு. சுப்பையா அவர்களுக்கும், திரு, முத்துக்கருப்ப பண்டிதர் குமாரி சௌபாக்கியவதி ஆனந்தம் அம்மாளுக்கும் 31-10-28 புதன் அன்றும் ஷை சங்கச் சார்பில் ஷை சங்கக் காரியதரிசியும் ஈப்போ ஆங்கிலோ சைனீஸ் ஸ்கூல் உபாத்தியாயருமான திரு. மிகு ஐயாரு அவர்களின் பெரு முயற்சியால் பிராமணீயம் வீழ்ந்த சுயமரியாதைத் திருமணம் சிறப்புற நடைபெற்றது. அச்சமயம் ஷை காரியதரிசி அவர்களால் மணப் பந்தலில் "சுயமரியாதை என்பதைப் பற்றி ஓர் சொன்மாரி பொழிந்தது போற்றத் தக்கது. கடைசியில் சுயமரியாதைக்கு உழைக்கும் 'குடி அரசு' க்கு ரூபாய் 5 மணமக்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

கண்டு மகிழ்ந்தோன், கோலக்கங்சார்.

## பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்

மன்னார்குடி டவுன் பெரிய கடைத்தெருவில் சந்தனக் கடை வைத்திருக்கும் திரு. கே. கோவிந்தராம் செட்டியாரவர்கள் நாளது வருஷம் நவம்பர் மாதம் 13-ந் தேதி செவ்வாய்க் கிழமை தினம் தமது முதல் மனைவியினுடைய சிரார்த்தத்தை புரோகிதத்தை அறவே நீக்கித் தமது பந்துமித்திரர்களுக்கும் ஏழை ஜனங்களுக்கும் அன்னமளித்து முடித்தார். ஒருநிருபர்.

மதுரை பகவான் ஸ்ரீ வெங்கடயோகீந்திரரின் அந்தரங்க சிஷ்யராய ஸ்ரீமத் மதுரமுத்து சுவாமிகள் மதுரமா நகரத்தில் 30-10-28 மாலை 5 மணிக்கு இம் மண்ணுலகத்தை நீத்தார். அவரின் புத்திரமித்திரர்கள் பதினாறும் நாளாகிய 14-11-28 கருமாதி சடங்கை முடிக்க 5 பார்ப்பனர்களை பேசி முடித்து வைத்தார்கள், நான் சென்னையிலிருந்து அக் காரியத்திற்குச் சென்றேன், அவ்வமயம் பார்ப்பனர்கள் கூடாதென நீக்கி அதற்கு ஆகவேண்டிய காரியங்களை முடித்து 300 ஏழை மக்களுக்கு உணவளித்து வைத்து சென்னை திரும்பினேன்- குடி அரசில் குடிகொண்ட பி. வி. பாலதீர்த்தன்.

முத்துராமலிங்கபுரம் அறுப்புக்கோட்டை தாலூக்கா முத்துராமலிங்கபுரம் கிராமத்திலிருக்கும் கெ. ரெ. ஜெகநாதரெட்டியார் தன் தகப்பனாருக்கு 4 வருடங்களாக பார்ப்பனரைக்கொண்டு நடத்திவந்த திதியை 11-11-28 ல் கழுகுகளாகிய பார்ப்பனச் சோம்பேறிகளுக்குக் கொடுக்காது ஏழைகளுக்கு அன்னமிட்டு முடித்துவிட்டார். ஒருநிருபர்.

சேரமாதேவி 7-11-28-ல் காலஞ் சென்ற எனது சகோதரி பிச்சியம்மாளின் கருமாதியை 16-11-27-ல் பார்ப்பனப் புரோகிதமின்றி சுயமரியாதை முறையில் நடத்தியதோடு திராவிடன் குடி அரசு பத்திரிகைகளுக்கு சுயமரியாதை சம்பாவனையாக ரூபா ஒன்று வீதம் இன்று மணியார்டர் செய்திருக்கிறேன். மு. வேலு வைத்தியர்.

பொறையூர், 5–10–28-ல் நடந்த எனது தகப்பனார் திதியை புரோகிதமின்றி உறவின் முறையாரைக் கொண்டு சுயமரியாதை முறையில் நடத்தினேன்.

நா சுப்ரமணியசெட்டி.

## அனுப்பபாளையம் கிராம பஞ்சாயத்து எலெக்ஷன்.

1928 ம் வருஷம் நவம்பர் மாதம் 5 ந் தேதி ஷை எலக்ஷன் செய்ய ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

எலக்ஷனை நடத்த அக்கிராசனராக திருப்பூர் தாலூகா போர்டு பிரசிடெண்ட் ஸ்ரீமான் ஆர். வி. ராமசாமி கவுண்டர் அவர்கள் விஜயம் செய்திருந்தார்கள் ஷை தாலூகா போர்டு பிரசிடெண்டு வி. ஆர் அவனாசியப்ப கவுண்டர் அவர்களும் ஷை தாலூகா போர்டு ஓவர்சியர் அவர்களும் தாலூகா போர்டு ஹெட் கிளர்க்கு முதலியார் அவர்களும் இவ்வூரிலுள்ள பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

பஞ்சாயத்தின் காரியங்களுக்காக ஜனங்கள் பேரில் எவ்வித வரியும் விதிக்காமல் பாரவண்டி சந்தை குப்பை கசாப்புக்கடை இவைகளில் வசூல் ஆகும் தொகையைக் கொண்டே பஞ்சாயத்தின் காரியங்களை நடத்திக் கொள்ள வேண்டியதென்றும் வந்திருந்த எல்லோரும் சம்மதித்து போட்டி இல்லாமல் 15 மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு எலக்ஷன் முடிவடைந்தது.

ஒரு நிருபர்.

## பழனி.

### பஞ்சாயத்துக்கோர்ட்டு பிரசிடெண்டு எலெக்ஷன்.

பழனி 15-11-28 ல் பழனி தாலூகா கச்சேரி கிராமசாவடியில் நடைபெற்ற பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டு எலக்ஷனில் ஷை பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டாக ஸ்ரீமான் ஆர். வி. ராஜன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு நிருபர்.





## சகலமேக சஞ்சீவி.

தங்கம் சேர்ந்தது. அநேக மெடல்கள், பரிசுகள், பத்திரங்கள் பெற்றது. பல காரணங்களாலுண்டான வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், நீரழிவு, கண்டமாலை, சூலைநீர், பற்றுவைரல், கிரந்தி, கட்டிகள், கருமேகம், வெண்மேகம், ஆராதரணம், புத்து, பீநிசம், கபாலநீர், இளைப்பு, காசம், குன்மம், சூதகம், கண் வியாதிகள், வாதநீர்கள் முதலியன 7 நாள் மருந்தில் நிச்சயமாகக் குணமாகும், அநுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 5—0—0.

கல்நார் பற்பொடி டஜன் 1-க்கு ரூ. 2½.

## சி: எம். சாமி,

நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.



## மதனகாமம்.

(புதுச்சேரி பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிடலீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ 1—0—0.

வஸந்த நிலையம். ரங்கப்பிள்ளை வீதி புதுச்சேரி.



## மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது. உத்திரவாதமுள்ளது.

கிரமமாக சாப்பிட்டுவந்தால் துரித ஸ்கலிதம், சொற்பன ஸ்கலிதம், முதலியன தீரும். நீர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்துமுறுக்சேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பனசக்திஉண்டாகும்.

20 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2–8–0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆனந்தநிலையம், திருச்சங்கோடு, S. I.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மெய்கண்டப்பிள்ளை பரம்பரையில் வந்த ஒரு பார்ப்பனர் மெய்கண்டப் பிள்ளையும் பாஞ்சோதியும் கல்லுப் பிள்ளையாரும் அறியாத ஒரு வித்தையைக் கண்டு பிடித்து, இரண்டு "பறையர்களுக்கும்" (தீண்டப்படாதவர்கள்) ஒரு முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்து விட்டாராம். அதுவும் ஒரே பார்வையாகப் பார்த்துத் தீக்ஷை பண்ணிக் கணப் பொழுதில் முத்தி கொடுத்து விட்டாராம். தில்லைவாழ் அந்தணருள் ஒருவராகிய இப்பார்ப்பனர் "பறையருக்கு" தீட்சை செய்து முத்தி கொடுத்தால் இப்பொழுதுள்ள அப்பார்ப்பாரைச் சேர்ந்தவர்களும் சந்தான பரம்பரையாரும் ஏன் "பறையரைக்" கோயிலுக்குள் விடக்கூடாது? சந்தான மடங்களுக்குள் ஏன் விடக்கூடாது? இப்படியானால், இப்பார்ப்பார் நந்தனாரை ஏன் பறைக்கோலத்தோடு கோயிலுக்குள் விடவில்லை? "பறையருக்கு" நிர்வாண தீட்சை பண்ண விதி சொன்ன ஆகமம் அவர்களைக் கோயிலுக்குள் விட வேண்டாமென்று சொல்லுமா? "பறையருக்கு" தீட்சை பண்ணும்படி (லெட்டர்) கடிதம் கொடுத்தனுப்பிய சிவம் நந்தனாரைப் பறைக்கோலத்தோடு கோயிலுக்குள் விடவில்லை என்று சேக்கிழார் சொல்லலாமா?

முத்திகொடுக்கும்வல்லபமும் பார்ப்பாருக்குத்தான் உண்டு போலும்! இப்பொழுதைப் பார்ப்பாரும் இப்படி முத்தி கொடுப்பாரா? மெய்கண்டப் பிள்ளை சந்தானத்தார் கொடுப்பாரா? பார்ப்பார் கடவுளைக் கும்பிடுவதற்கேயல்லாமல் முத்திக்கும் தரகரா? அப்படியானால் தட்சணை பெருந்தொகையாய் விடுமல்லவா? இது என்ன அநியாயம்! உமாபதியுடைய அபிஷேக நீரினால் முள்ளி செடி முத்தியடையும் பக்குவம் பெற்றதென்று வாய் கூசாது வெட்கமும் லஜ்ஜையுமின்றி சைவப் போதகர்மார் ஓலமிடுகின்றனர். அவர் தீர்த்தப் பிரசாதத்தை அவர் சமையற்காரரும் மற்றைய சீடரும் சாப்பிட வில்லையா? சாப்பிட்டால் அவர்களும் முத்தியடைந்திருக்க வேண்டுமே! முள்ளிச் செடியை மாத்திரம் சொல்லுவதேன்? ஆகா! முள்ளிச் செடியின் புண்ணியமே புண்ணியம்!

இது பார்ப்பார் எழுதி வைத்த கதையா? சந்தானத்தார் எழுதி வைத்த கதையா? பார்ப்பானுடைய தீர்த்தமகிமையை அறிந்த சைவர் ஏன் பட்டினி கிடந்து தவம் பண்ணுகிறார்? பார்ப்பானுக்கு நல்ல தெட்சணையும், அரிசி, காய், கறி, பழம், பால், நெய், தயிர், சோமன் இவைகளைக் கொடுத்து விட்டு தீர்த்தம் வாங்கி சாப்பிட்டுச் சுலபமாக முத்தியடையலாமே? உமாபதி என்ற பார்ப்பனர் அபிஷேகம் பண்ணிவிட்ட-சாக்கடையில் போன-தண்ணீருக்கு இவ்வளவு மகிமை ஏற்படுத்தி விட்ட வேளாளச் சைவப் பழங்கள் பார்ப்பானே கதியென்று அவன் காலில் விழுந்து தட்சணை கொடுப்பதில் என்ன புதுமையென்று கேட்கிறேன். நடராசரும் தமது முத்தி கொடுக்கும் உத்தியோகத்தைப் பார்ப்பானுக்கே கொடுத்து விட்டாரென்று சந்தானத்தார் ஓலமிடும்போது, பார்ப்பான் தான் தெய்வப்பிறப்பு, அதாவது பிரமாவின் முகத்தில் பிறந்தேன் என்று சொல்வதில் என்ன பிழை?

இச்சந்தான குரவர் சரித்திரம் முழுவதும் ஆபாசமான பொய்க்கதைகளாகிய கட்டுக்கதைகளாயிருக்கவும், தற்காலச் சைவப்பழங்கள் இந்த மெய்கண்டப் பண்டிதரைச் சைவசமய சந்தான முதற்குரவராகக் கொண்டு இவரை வழிபட்டு, இவரும் இவர் மாணவரும் செய்த இலக்கியங்களை நந்தி பரம்பரையில் வந்தவையென்று வாய்ப்பாகச் சொல்லி பலர்க்கும் போதித்து உலகமக்களை ஏமாற்றி(அ)கௌரவமாக வயிறு வளர்க்கிறார்கள். எத்தனையோ மடங்களும் ஏற்பட்டு விட்டன. இம்மடங்களினுள்ள பெரிய தம்பிரான் சாமிகளும், குட்டித் தம்பிரான்களும், மற்றைய ஆட்டுக்குட்டிகளும் பெருந்தொகையான பணத்தை செலவிடுகின்றனர். உருத்திராக்கத்தைச் சாட்டாக வைத்து இவர்கள் உடம்பில் அணியும் பொன்மணிகளின் விலையும் இவர் போசன முதலியவற்றின் செலவும் இவ்வளவென்று சொல்ல முடியாது. இவர்களால் சைவ சமயத்துக்காக இதுவரை ஆன நன்மைகள் ஏதும் உண்டோ? தமிழ் நாட்டில் எத்தனையோ ஏழைகள் ஒரு வேளைக்கஞ்சிக்கும் வழியில்லாமல் தவிக்கிறார்கள். இச்சந்தானத்தாரோ என்றால் இராச போசனமுண்டு இடம்பமாகச் ஜீவித்து ஐம்புல இன்பமும் அநுபவித்து சுக பூபதிகளாய்ச் சோம்பேறிகளாய வீற்றிருக்கின்றனர். முன் உள்ள அரசர்களும் ஜமீன்களும் அறியாமையால் இம்மடங்களுக்குப் பெருந்தொகையான நிலபுலங்களும பணமும் கொடுத்து விட்டார்கள். இச்சந்தானப் பரம்பரையார் இச்செல்வத்தை தங்களிஷ்டம் போல அநுபவித்துச் சோம்பேறிகளாய்க் காலங்கழித்தனர், கழிக்கின்றனர். கவிராயர்களும் இவர்களைக் கடவுள் உருவமென்று புகழ்ந்து இராச போசனமும், பட்டுப் பீதாம்பரங்களும் பணமும் பெற்றனர், பெறுகின்றனர். மெய்கண்டப் பிள்ளையெனும் பண்டிதர் புண்ணியத்தால் இவர்கள் கோடீஸ்வரர்களாக வீற்றிருக்கின்றனர். உலகத்துக்கு இவர்களால் ஆவது என்ன? இந்தக் கொள்ளைகளை எழுதமுடியாது. இப்பணமெல்லாம் பொதுநன்மைக்காக செலவு செய்யப்பட்டால் தமிழ்நாடு க்ஷேமமடையாதா?

"சுயராஜ்யம்" ஏன்? இம்மடச் சொத்துக்களே போதுமல்லவா? "மிஸ் மேயோ" இம்மடங்களின் நிலையை அறிந்திருந்தால் இவ்விஷயமாக ஒரு புத்தகம் பிரத்தியேகமாக எழுதியிருப்பாரல்லவா?

ஆதலால் "ஏரோப்ளேன்" ஆகாயத்தில் வந்தகற்பனைப் பாஞ்சோதியும் கல்லுப்பிள்ளையாரும் படிப் பித்த தான்தோன்றி மெய்கண்டப்பிள்ளையவர்களையும் அவர்கள் செல்வ பூபதிகளையும், அவர்கள் செய்த சந்தானச்வயிற்று வளர்ப்பு நூல்களையும்பாராட்டிச்சோம்பேறிகளாய்மாண்டுபோகாமல்உலகநன்மையைக் கருதி உழைத்து வாழ்வதே 'சுயமரியாதை' யாகும். சுயமரியாதைவாழ்க

## பார்ப்பனீய-சுயமரியாதைப்போர், சுயமரியாதைக்கு வெற்றி-

சென்னைத் திருமைலாப்பூர் கொச்சிக்குப்பத்திலிருக்கும் திரு. ஜெகந்நாதச் செட்டியார் அவர்கள் தமது தந்தையார் திரு. சுபாபதிச் செட்டியார் அவர்கள் காலடைந்த 16 ஆம் நாள் சடங்கை பார்ப்பனப்புரோகிதரை நீக்கி, திருமயிலை உயர்திரு மாணிக்க ஓதுவார் அவர்களைக் கொண்டு நடத்தத் தீர்மானித்திருந்தார் உடனே புரோகிதர்ஷை குப்பம் நாட்டாண்மைக்காரர்களாகிய நான்கு செட்டியார்களிடம் சென்றுதம் மூலமாகவே 16-ம் நாள் சடங்கை நடத்தச் செய்ய வேண்டுமென்றுமுறையிட்டார். அதைதெய்வவாக்காகக்கொண்டு அச்செட்டியார்கள்நான்குபேருஞ்சேர்ந்துஊரார் எல்லாரையும்வருவித்துஒருகூட்டம்கூட்டினார்கள் அக்கூட்டத்தில்நாட்டாண்மைக் காரர்களாகிய நான்கு செட்டியார்களைத் தவிர மற்றவர்கள் எல்லாரும்ஓதுவாரைவைத்துத்தான்நடத்த வேண்டுமென்றுசொன்னார்கள்.உடனேநாட்டாண்மைக் காரர்கள் 'அப்படியானால் நாங்கள் அச்சடங்குக்கு வரமாட்டோ'மென்றும்'மற்றவர்களை அங்கு போகக்கூடா, தென்றும் சொன்னார்கள். பின்னர், எல்லாரும் நீங்கள் சொல்வது சரியல்லவென்று சொல்லி விட்டு யாவரும் திரு ஜெகந்நாத செட்டியார் அவர்கள் இல்லத்திற்குச் சென்று ஷை சடங்கிற்கு உடன் இருந்து முடித்து உண்டு களித்துச் சென்றதோடு இனிமேல் புரோகிதனை கல்யாணங்களுக்கும் மற்றைய காரியங்களுக்கும் அழைப்பதில்லை என்றும் முடிவு செய்தனர். சுயமரியாதைக்கு ஜே!

ஒருநிருபர்

## ஒரு பார்ப்பனப் பத்திரிகையின் கூற்று

சென்னை வேப்பேரியில் வெளியாகும் 'விநோதினி' என்ற பத்திரிகைக்கு நான் 3—9—28ல் ரூ 2 ஒருவருட சந்தாத்தொகையை "விநோதினி"யின் மானேஜருக்கு அனுப்பினேன். அதை K K. சர்மா என்ற ஒருவர் பெற்றுக்கொண்டதாக கையெழுத்திட்டு மணியாடர் ரசீது எனக்கு வந்து சேர்ந்தது. ஆனால் நாள் 15 ஆகியும் பத்திரிகை வரவில்லை. பதிலும் காணோம். மறுபடியும் 4, 5 கார்டுகளும் நோட்டீஸ் மாதிரிஒரு ரிஜிஸ்டர் லெட்டரும் அனுப்பினேன். அந்த லெட்டரையும் 16—102-8 ல் பெற்றுக் கொண்டதாக எனக்கு ரசீது கிடைத்ததே யொழியபதிலில்லை.காரணமும்தெரியவில்லைஆனால்பத்திரிகைநின்றுவிட்டதாகவும்தெரியவில்லை. இபபத்திரிகை இன்னும்நடந்துவருகிறதாகவும் திருச்சியில் வெளியாகும் 'பிரசண்ட மகா விகடன்' பத்திரிகையில் கண்டேன். மதவிஷயத்திலும் அரசியலிலும்தான் இப்பார்ப்பனர்கள்மோசடி செய்கிறார்களென்றால் பத்திரிகை தொழிலிலும்கூடவா இக்கூற்று செய்யவேண்டும.

அன்பர்களே இதுபோன்ற பத்திரிகைகள் விஷயமாய் எச்சரிகை செய்கின்றேன். எச்சரிகை!!, எச்சரிகை!!

S. K. குருசாமி நாயக்கர்

"ரிவோல்ட்"

REVOLT

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒரு முறை வெளியாகின்ற ஓர் ஆங்கிலப்பத்திரிகை.

வருட சந்தா ரூ 4.
மாணவர்களுக்கு ரூ. 3.
வெளி நாட்டுக்கு ரூ. 5.

ஆசிரியர்கள்:—
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்
S. இராமநாதன் M. A. B. L.,

விலாசம்:—
மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

REVOLT

சுயமரியாதை பெறவேண்டுமானால் "குடிஅரசு" திராவிடன் பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்

விலாசம் தேவை.

வாழ்க்கையின்பம், காதற் பெருக்கு, பாவச முதிர்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், "ரகஸ்ய ரத்னம்" என்ற புத்தகத்தை இனமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற்பெட்டி 222,
மதராஸ்.

திருக்குறள்.

மூலமும் உரையும்

நீங்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால்
திருக்குறளை வாங்கிப் படியுங்கள்.

விலை அணா 4

திருக்குறள் ஒரு குலத்துக்கொரு நீதிபோதியாமல் மக்கள் யாவரும் சமம் என்று செப்புகின்றது.

எங்கள் திருக்குறள் உரை, தமிழ்நெறிபற்றி வெகு தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

பதம்பிரித்த மூலமும் அதற்கிணங்கிய பொழிப்புரையும்.

நான்கு அணாவிற்கு முன்னூற்றுக்கு மேற்பட்ட பக்கங்கள்.

வெகு குறைந்த விலை! மிக நல்ல உரை!
சுத்தமான பதிப்பு! கிளேஸ் காகிதம்! மிகதூய தமிழ்!

வெகு சொற்ப பிரதிகளே அச்சிடப்பெறுகின்றன. நவம்பர்-மீ 30உக்குள் தபால் செலவு 0—1—6 சேர்த்து 0—5—6 தபால் பில்லைகள் அனுப்புவோர்க்கே மேற்குறித்த விலை. பிறகு பிரதி ஒன்றுக்கு 8 அணா விலை, தபால் செலவும் வேறு. குறித்த அளவிற்கு மேல் ஆர்டர் வந்தால் ஸ்டாம்புகளைத் திருப்பி அனுப்பிவிடுவோம், ஆகையால் இன்றே ஆர்டர்செய்ய முந்துங்கள். பிறகு வருந்துவதில் பயனில்லை.

பொங்கல் புதுநாளன்று புத்தகங்களைப் பெறுவீர்கள்.

தமிழ் நூற்பதிப்புக் கழகம், காஞ்சீபுரம்.

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற
அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், திறம், வாடை, குணம் அமைந்துள்ளது எங்கள் உலகடிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்

(V. 120) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,
போஸ்ட் பாக்ஸ் 140, மதராஸ்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கமேலீட்டால் ஒன்றும் கூற முடியாது தவித்ததை கண்ட கைகேசி 'அரச நீதியை அநுசரித்து இராமனுக்கு முடி சூட்டும் பேச்சைப் பேசி இரவு முழுதும் மகிழ்ச்சியால் தூக்கமில்லாமல்சோர்ந்திருக்கிறார்மன்னர் இராமனை இப்பொழுதே போய் அழைத்து வாரும் சீக்கிரம் என்று கட்டளையிட்டாள் சுமந்திரனும்இராமனுக்கு நன்மை வருமென மகிழ்ந்து அழைத்துவரச்சென்றான.

வாசலில் பல மன்னர் கூடியிருந்தனர். அவர்களைக் கண்ட சுமந்திரன் "நீங்கள் காத்திருப்பதை அரசனிடம் தெரிவிக்கிறேன் என்று கூறி மறுபடியும் தசரதனிருக்குமிடம் சென்றான் மன்னனிருந்த இடத்தினருகே சென்று அங்கே போட்டிருந்த திரைக்கு எதிரே நின்று கொண்டு அவன் "விடிந்துநெடுநேரமாயிற்று, உத்தரவுப்படி எல்லாம் தயாராயிருக்கிறது, தயவு செய்து எழுந்து மேலே நடக்க வேண்டியதைக் கட்டளையிட வேண்டும். எல்லாம் காத்திருக்கிறார்கள்" என்று கூறினன் இச்சொற்கள் தசரதனுடைய காதில் விழ அவன் விழித்துக் கொண்டு "சுமந்திரரே! இராமனை அழைத்து வரும்படி கைகேசி உம்மை அழைத்து வரும்படி சொன்னாளல்லவா? இன்னும் ஏன் என் கட்டளைப்படி அழைத்து வரவில்லை? தூங்குகிறேனென்று நினைக்கவேண்டாம் சீக்கிரமாகப் போய் இராமனை அழைத்து வாரும்" என்று மறுபடியும் உத்திரவு செய்தான் சுமந்திரன் தலைவணங்கி இராமனுக்கு ஏதோ நன்மை உண்டாகப் போகிறதென்று மகிழ்ந்து இராமனை அழைத்து வரப்புறப்பட்டான் இவ்வரலாற்றை ஆராய்வோம்.

மேல்கண்ட வரலாற்றினாலே தசரதன் மிகவும் அற்ப அறிவும் அற்ப குணமுமுள்ளவன் என்பது தெரியவருகிறது. அவன் கைகேசியை மணஞ்செய்யும்போது அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைக்கே அரசைத் தருவதாக வாக்குறுதி செய்தான் பின் அவ் வாக்குறுதிக்கு மாறாக இராமனுக்கு முடி சூட்டநினைந்து பலவாறு முயல்கிறான். அதனால் பரதனை வஞ்சித்து அவனுடைய பாட்டனுடைய ஊருக்குத் தந்திரமாக அனுப்பிவிடுகிறான். எல்லோருக்கும் நல்லவனாக நடந்து எல்லோருடைய அன்பையும் பெறவேண்டும், அப்படியானாலே அரசைப் பெறலாம் என இராமனிடம் கூறி எல்லோரிடமும் முக்கியமாக கைகேசியிடத்தில் மிகவும் நல்லவனாக நடந்துகொள்ளுமாறு தூண்டுகிறான். கிரமமாக அரசாட்சி பரதனுக்கே உரியதாகும், அதனால் அதைப் பெறுவதற்குத் தன்தந்தையினுடைய சூழ்ச்சிகளின்படி தானும் நடந்துகொண்டாலே நினைத்தது கைகூடுமெனத் துணிந்து இராமன் அவ்வாறே நடக்கிறான். தசரதன் வசிட்டன் சுமந்திரன் முதலிய அமைச்சரையும் தன் வசப்படுத்தி குடிகளையும் குறுநிலமன்னரையும் அழைத்துப் பாசாங்குபண்ணி உண்மையறியாத அவர்களையும் இராமனுக்கு முடிசூட்டச்சம்மதிக்கச் செய்து அம் முடிசூட்டும் மறுநாளே நடைபெறவேண்டுமெனவும் முடிவுசெய்கிறான். யாவரும் இசைகின்றனர். அரசனுடைய வஞ்சனையை வசிட்டனும் சுமந்திரனும் உணர்ந்தும் அவனுக்கு உடந்தையாயிருக்கின்றனர் இராமனை வரவழைத்து அரசனிடம் உண்மை தெரிந்து பரதனுக்கு வேண்டியவர்களாக யாராவது இருந்தால் அவர்கள் அவனுக்குக் கேடு சூழக்கூடும் ஆகையால் மிகவும் வேண்டிய நண்பர்களின் பாதுகாவலிலிருக்கவேண்டுமென்றுசொல்கிறான். பரதனுக்குத் தெரிய தன் முன்னரே முடிசூட்டல் நடைபெறவேண்டுமெனவும் தசரதன் விரைகிறான் இராமனும் அரசாட்சிப் பேராசையால் இவ்வளவு வஞ்சனைகளுக்கும் இசைந்திருக்கிறான். அரசன் திரும்பவும் கூப்பிடுகிறானெனச் சுமந்திரன் கூறியபோது முடிசூட்டுக்குஇடையூறேஎனஅஞ்சினன இவ்விவரங்களெல்லாம்நாம்முன் கட்டுரைகளில் விவரமாக ஆராய்ந்தவை.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகுமல்லவா! தற்செயலாக இராமனுடைய முடிசூட்டை அறிந்த கூனி கைகேசிக்கு வரும் ஆபத்துக்களை எடுத்துக் கூறி வசப்படுத்தி தசரதனிடம் இரண்டு வரங்களையும் கேட்கத் தூண்டுகிறாள். தசரதன் கைகேசிக்கு இவ் விவரம் தெரியாதென முற்றும் நம்பி இதை எதிர்பார்க்காமலும் காமவசப்பட்டும் முன்னேயவரங்களைக் கொடுக்க இசைந்து விட்டான்.

மேல்கண்ட வரலாற்றில் தசரதன் தன்னை மிகவும் வயதானவனென்றும் சாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதாகவும் கூறுவதைக் காணலாம் இவ்வளவு தாழ்ந்த நிலையிலிருப்பவன் விரைவில் தன் மகனுக்கு முடிசூட்டி வைத்துவிட்டு அந்த அவசரத்திலும் காமப்பித்தேறி கைகேசியைத் தேடி வருகிறான். இவ்வரலாற்றில் அவன் இராமனை மிகவும் அழகுள்ளவனெனப் புகழ்கிறான். அவனுடைய அழகை விவரிக்கிறான்; அவனைப் பிரியமுடியாமல் வருந்துகிறான்; கடைசிவரை அவனுக்கு எப்படியாவது முடிசூட்டவேண்டுமென்று முயல்கிறான். மத்தியில் அரசைப் பரதனுக்குக் கொடுப்பதாகவும் ஆனால் இராமனைக் காட்டுக்கனுப்பாமல் கிழவனாகிய தன் பக்கத்திலே வைத்துப்பார்க்க அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் மன்றாடுகிறான்; மற்றைய பிள்ளைகளைக் காட்டிலும் இராமனிடமே மிகவும் அளவிலடங்காத ஆசை தனக்கிருப்பதாகக் கூறுகிறான்; அதனால் தன் ஆசைக்கிருப்பிடமான வளாகிய கைகேசியின் மகனாகிய பரதனை வஞ்சிக்கப் பலவாறு முயல்கிறான். இவ்வாறு மற்றைய மக்களைக்காட்டிலும் இராமனிடம் அதிக ஆசை வைப்பதற்கும் அதற்காக ஒரு மகனைத் துணிந்து வஞ்சிப்பதற்கும் மகனாகிய பரதனை வேண்டுமென்று வேறு நாட்டுக்கு அனுப்பியவனே மற்றொரு மகனாகிய இராமனைப் பிரியமாட்டாமல் தவிப்பதற்கும் தகுந்த காரணமிருத்தல்வேண்டும்.

ஓர்பெண்ணாகிய கைகேசியிடத்திலிருந்த ஆசையைக்காட்டிலும் ஓர் ஆணாகிய இராமனிடத்தில் தசரதன் கொண்டிருந்த ஆசைக்கோர் அளவில்லைப் போலும். உலகத்துச் சிலரைப் போல இத்தசரதன் ஆண்பித்தும் கொண்டவன் போலும்! கிழவனாகிய இவன் தன்னருகிலேயே இராமனை வைத்துப் பார்க்க வேண்டுமென்று பித்து கிரம்பக் கொண்டு புலம்புகிறான். இப்பித்தே இராமனுக்கு உண்மையில் உரிமையில்லாத அரசாட்சியையும் கள்ளத்தனமாக வஞ்சித்து அவனுக்குக் கொடுக்குமாறு தசரதனைத் தூண்டியது போலும்!

இவ்வளவு கேவலமான பித்தேறிய புத்தியுடைமையாலேயே தசரதன் தனக்குக் கேடாதல் பற்றி கைகேசியின் வேண்டுதலுக்கு ஒரு நாளும் இசையேனெனக்கூறுகிறான்; தசரத காரியமாகிய அவள் காலைத் தொட்டுப் பணிந்து பல முறை வேண்டுதலைச் செய்கின்றான், பலவாறு அவளை இகழ்கிறான்; பலவாறு அவளையும் பரதனையும் புகழ்கிறான்; காட்டுக்குப் போக மாட்டேனென்று சொல்லி இராமன் மறுத்து விடமாட்டானா எனக்கூறுகிறான். கடைசியாக தன் ஆசைக்கிருப்பிடமான இராமன் தன் முன் அப்போதுஇல்லாமையாலும் தன் ஆசைக்கிருப்பிடமான கைகேசி தன் முன் இருந்தமையாலும் கைகேசிபுறமே சாய்கிறான்.

பலரறியக்கூறுத வாக்கானதால் அதனை வற்புறுத்தாமல் விட்டு விடுமாறு தசரதன் கைகேசியை வேண்டுகிறான். அவள் எதற்கும் அசையவில்லை புத்தி மயக்கத்தால் தசரதன் விண்ணுலகத்தில் தேவர்கள் பெண்ணுக்காக மகனைத்துரத்தலாமா என்று கேட்டால் எவ்வாறு உயிர் தரிப்பேனென்று புலம்புகிறான். விண்ணுலகம் போனபின் உயிர் இம்மண்ணுடலில் தரிப்பதெப்படி இவ்வுயிர் போயன்றோவிண்ணுலகமடைதல்வேண்டும்?

இராமனைக்குடிகளுக்கும் முக்கியமாகக் கைகேசிக்கும் வேண்டியவனாக நடந்து கொள்ளுமாறு அவன் தூண்டியிருக்கிறானென்பது அவன் பேச்சினாலேயே தெரிகிறது இராமன் மிகவும் தந்திரசாலியாதலின் அவ்வாறே நடந்துவந்திருக்கிறான் அதனாலேயே கைகேசியும் அவனை நல்லவனென மயங்கியிருந்திருக்கிறாள். தசரதன் மிகவும் தீயவனானதால் தன் தீய எண்ணத்திற்கேற்ப பரதனையும் இகழ்கிறான் உண்மையாக அரசாட்சிக்கு உரியவனாகிய பரதனை வஞ்சித்து நாட்டைவிட்டு ஓட்டிப் பாட்டன் நாட்டையுமாறு விடுத்ததோடு நில்லாமல் அவனுக்கு உரிய அரசாட்சியையும் இராமனுக்குக் கொடுக்கத் துணிந்து நின்ற தசரதனினும் கொடிய வருளரோ? இவ் வஞ்சகனுடைய சூழ்ச்சியை ஒருவாறு கண்டுகொண்டு, பரதனே உண்மையில் ஆட்சிக் குரியவனெனத்தெரியாமலிருந்தாலும் அவனுக்கு முடிசூட்டவும் அக்கிரமமாக முடி சூட முனைந்து உலகை ஏமாற்ற நல்லவனைப் போல பாசாங்கு செய்து நிற்கும் இராமனை நாட்டைவிட்டுக் காட்டுக்கு அனுப்ப வேண்டு மென்று தற்காப்பின் பொருட்டு முனைந்து நிற்கும் கைகேசி எவ்வாறு கொடியவளாவாள்? ஐயோ புலவர்கள் நல்லவர்களைக் கெட்டவர்களாகவும், கெட்டவர்களை நல்லவர்களாகவும் உலகுக்குக் காட்டி மயங்கச் செய்கின்றார்களே! என்னே பரிதாபம்! மேன்மைத் தமிழ் மக்களே! பெரியோர்களே! உண்மையாராய்சியாளரே! இவ்வுண்மைகளை யெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்து உங்கள் நண்பர்களுக்கும் உண்மையை யெடுத்துக் காட்டி நல்வழிப் படுத்த முன்வாருங்கள்; முன்வாருங்கள்.


# மும்மணிகள்

அன்பர்களே!

நீங்கள் கொடுக்கும் காசுக்கு மண்டலக்கணக்கல்ல மாதக்கணக்கல்ல மணிக்கணக்கல்ல அந்த க்ஷணமே கைமேல் பலன்.

ஒரு மணி மூட்டைப்பூச்சிகளுக்கு எமன். எந்த சந்துகளில் ஆயிரக்கணக்கான மூட்டைப்பூச்சிகள் குடியிருந்துகொண்டு இரவு பகல் குழந்தைகள் முதல் யாவருடைய ஜீவனையும் உறிஞ்சும் கொடி பூச்சிகளுள்ள விடங்களில் இந்த மருந்துபட்ட க்ஷணமே அவ்வளவும் சாகிறது

2 அவு. பாட்டல் 1க்கு ரூ 1—0—0

மறுமணி சர்வதேள் விஷத்திற்கும் எமன், உச்சலிங்கத்தேள் வாதத்தேள் பித்தத்தேள் சிலேஷ்மத்தேள் கண்டுவாய்க்காளி இவைகள் கடித்தவிடத்தில் நோட்டீசில் கண்டபடி கடிவாயில் மருந்தைப் போட்டு உடன் புகையைப் பிடிக்க அந்த க்ஷணமே எப்பேர்ப்பட்ட தேள்களின் விஷமும் ஓடுவதைப்பார்க்கலாம் தேள் கொட்டின விடத்தில் வீக்கம், மேல்சுவாசம், அறிவு நீங்குதல், வாந்தி முதலிய வைகளை தடுக்கும் விபரங்களடங்கிய நோட்டீசும் மருந்துடன் வரும்.

3 பாட்டல் ரூ 1—0—0

மும்மணி சஞ்சீவிப்புகை வருஷக்கணக்காயிருக்கும் எவ்வித தலைவலிக்கும் புடனி இடுப்பு திரேகத்தில் எவ்வித வலிக்கும் இத்தப்புகையைப் பிடித்தால் அத்தப்பொல்லா வேதனை நீக்கும் விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளிகள் உத்தியோகஸ்தர்கள் முதலிய அதிகவேலையுள்ள சனங்களை தட்டிஎழுப்பி ஜரூராய் வேலைகளை பார்க்கச்செய்கிறது. கிரி 2 க்கு ரூ 1—0—0

எல்லா விபரங்களும் மருந்துடன் வருகிறது.

கா. வெ. வேலுமயில், மயிலர் திருமாளிகை,
காங்கயம், தென் இந்தியா

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மல் ஞானசம்மந்த சுவாமிகள் அல்லவோ காட்டினர் என்பதும், சம்பந்தர் பாட்டிற்கு கதவு உடனே திறந்தது என்பதும் அப்பர் பாட்டிற்கு கதவு அநேக நாள் பொறுத்து மூடினது என்பதும் என்ன ரகசியம்? பெரிய புராணம் 63 நாயன்மார் கதையும் பெண்ஜாதியைக் கேட்க மட்டும் சிவனே கிழப் பிராமணனாகவந்தகதையும், சூத்திரன் தவம் செய்ய அவன் தலைவெட்டின ராமாயணக்கதையும் பிராமணனாகவந்தால்தான் உபதேசம்செய்வேன் என்று சொன்ன பாகவதக் கதையும் மனுஸ்மிருதியை ஒட்டவில்லை என்று சொல்ல முடியுமா?

நேற்று அம்மயநாயக்கனூரில் சங்கரர் செய்த சரஸ்வதி பூஜைக்கு பாகவதமும் தேவிபாகவதமுமல்லவா பிரமாணமாக சாஸ்திரிகள் சொல்லவும் சங்கராச்சாரி ஒத்துக்கொண்டதுமாக இருந்தது- சங்கரருக்கும் சரஸ்வதிக்கும் சம்பந்தமென்ன? சம்பந்தமிருந்தாலும் பாகவதமும் தேவிபாகவதமும் அதற்கு எப்படி பிரமாணமாகும்- தேவிபாகவதம் தெலுங்குப் பாப்பான் சைவமதத்தைக் கண்டிக்க எழுதின வடு- சரஸ்வதி பூஜைக்கு பிரமாணமாக விளங்கினவர் அம்மநாயக்கனூர் ஜமீன்தார்- அவர் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்தவர், இது சங்கரருக்குப் பிரமாணமானால் உங்களுடைய சைவ சித்தாந்தங்களெல்லாம் எதற்கு? சைவனெல்லாம் அவர் காலில் விழுந்து பணத்தை ஏன் கொடுக்கிறான்? உத்தியோகஸ்தனுக்குப் பயந்தா? ஊராருக்குப் பயந்தா? பொதுவாகப் பெரியவர் என்று நினைப்பதினலா? அப்படியாயின் மற்ற அன்னிய மதப் பெரியவர்களுக்கு கொடுக்கலாமே? முக்திக்கு பிரதானமான பரார்த்த ஆலய பூஜா கைங்கர்யம் என்ற ஆதி சைவர்களுக்கே குருத்துவமுண்டென்று சொல்லும் குருக்களெல்லாம் எங்கே? அவன் சிவனின் முகத்திலிருந்து வந்தவன். சங்கரர் பிர்மாவின் முகத்திலிருந்து வந்தவர்- பிர்மாவின் மகனா சிவன்? சிவத்தின் மகனா பிர்மன்? என்கின்ற சந்தேகம்தான் அவர்கள் தர்க்கத்திலும் சாஸ்திரத்திலும் இன்னும் முடியடையவில்லையே யொழிய இரண்டுபேர்களும் பிராமணன் என்பதும முகத்திலிருந்து பிறந்ததும் முடிந்து விட்டது- நாமெல்லாம் காலிருந்து பிறந்ததும் சூத்திரன் என்னும் அடிமையாகப்பிறந்ததும் முடிந்துபோன விஷயம். இந்தப் பாழும் வெறும் மோசடியை எப்படித் தொலைப்பது? "சோற்றில் மலம்இருந்தாப்போல் ஊற்று" என்றால் முடியுமா? தில்லைவாழ் அந்தணர்கள் அடியார்க்கும் அடியேன் என்கிற சீட்டு வந்தவழி தெரியவேண்டாமா? இதற்காகத்தான் உங்களுடைய தொண்டன் ராமசாமி நாயக்கர், ஒரே இடத்தில் எல்லாரையும் உண்டாக்காமல் முகத்திலும் காலிலும் இன்னும் பலவிடத்திலும் உண்டாக்கின சிவனும் பிர்மாவும் செத்து அவர்களுக்குப் பாடையும் பல்லக்கும் கட்டி சுடலையாடி களையும் பேயோட்டிகளையும் அவர்கள் வாசஸ்தலமான சுடுகாட்டுக்கே கொண்டுபோய் விட்டுவிடலாமென்கிறார்- இதனால் நாட்டுக்கு வேண்டிய நல்ல சிவனுக்கும் ஊருக்கு வேண்டிய நல்ல சிவனுக்கும் யாதொரு பாதகமுமில்லை-


வேதத்தை அபாவித்ததை என்று கண்டித்து ஒதுக்கினதாகச் சொல்லும் ஆகம பண்டிதர்கள் தபசி அபசாரம் செய்து தீட்சதரான பெயருடையவர்கள் திருத்த மண்டபத்திலிருந்து சேவிக்கலாமென்று சொல்லுவதில் சிறிது தந்திரமில்லையா? இது சுமார்த்தக் கொள்கையுடைய தீட்சதர்களுக்கு ஏற்பட்ட ஆகம சித்தாந்தமோ? "தில்லைவாழ் அந்தணர்கள் அடியார்க்கும் அடியேன்" என்று எழுதி சீட்டில்சொருகிவைத்த சாமர்த்தியமா! யாரும் நடமாடாத ஐந்தாம் பிரகாரத்திலிருந்து கோபுரத்தைப் பார்த்து பஞ்சமர்களும் தாழ்ந்த சாதிக்காரர்களும் சேவித்துக் கொள்ளலாமென்கிற விதிகளையெல்லாம் படித்து அதே பற்றிக்கொண்டதினால் நம் பெரிய பண்டிதர் சுவாமி வேதாசலம் பஞ்சமர்கள் சேவிலுக்குள் வர ஒருக்காலும் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்றார்- அவர் பெரும் கோபம் தணியட்டும். அவருக்கு அல்ப ஆயுள் தாண்டி 52 வயதாய் விட்டது- இனியும் சிறிது காலம் எல்லாருக்கும் சிவம் பொதுவென்பதைக் காட்டிவிட்டுப் போகவே அவர் இந்த உலகத்தில் வைத்துவிட்டுப்போகும் பொருள்.

தொடரும்-


குறைந்த விலை ! குறைந்த விலை !!

இன்னும் ஒரே மாதம் வரையில் !

கியாதி பெற்றதும் இந்தியாவில் ஏராளமாகச் செலவானதுமான



பாக்கெட் டிடக்டிவ்

அல்லது


வீ பாக் ரால் ஸ்கோப்.

என்றும் நூதன அமெரிக்கக்கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம்.

இக்கருவியினால் திரும்பிப்பாராமலேயே உங்கள் பின்னே நடப்பதைத் தெரிந்து கொள்ளலாம்- உமது காதலியின் செய்கைகளை அவள் தெரிந்து கொள்ளாமலேயே அறிந்துகொள்ளலாம். ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இத்துடன் நான்கு லீலா விநோத பிரஞ்சு போட்டோக்கள் இனமாகச் சேர்த்து அனுப்பப்படும்.


ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1—4—0. ஏககாலத்தில் உள்நாட்டிலிருந்து இரண்டு கருவிகள் தருவித்தால் தபால் செலவில்லை.

தி. பான்ஸி வாட்சு ஆபீஸ், மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.




எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்ரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜீனன் வாட்சு கம்பெனி

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.


சுயமரியாதை பெற்றால்
சுயராஜ்யம் பெறலாம்


ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்; நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0

மாதிரிகாப்பி இனம்.


ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
தந்தி விலாசம்:—விகடன், சென்னை-

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.




இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன. உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

## வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலைத் தெரு, தபால் பெட்டி நெ. 119 ஜி.டி. மதராஸ்.

## "ரிவோல்ட்"

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ. 4—0—0 |
| மாணவர்களுக்கு | ரூ. 3—0—0 |
| வெளிநாட்டுக்கு | ரூ. 5—0—0 |

ஆசிரியர்கள்:—

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

S. இராமநாதன், M. A., B. L.,

விலாசம்:—


மானேஜர், "ரிவோல்ட்,"

ஈரோடு.

---

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

**இனாம்! இனாம்!!**



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---

## 'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் ஒரு வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0

வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,

விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

---

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. சிறுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.

திரௌபதை அம்மன் கோவில் வீதி,

புதுச்சேரி.

---

இனாம்! இனாம்!! இனாம்!!!


## 135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துகள் இனாம்.

5-வருஷம் உத்தரவாதம்] ராஜூ'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5

இந்தத் தமிழ் எழுத்துக்களடங்கியபெட்டிஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது. ஏனெனில், தங்களுக்குத் தேவையான, விலாசங்கள், முதலியவைகளைத் தாங்களே அடித்துக்கொண்டு கார்டு, கவர், கடிதம் லேபில்கள் முதலியவைகளில் தமிழிலும் இங்கிலீஷிலும் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம்- இந்தப்படத்தில் கண்டபடி அதாவது.—

அ அ அ ஆ ஆ ஆ இ இ ஈ ஈ உ உ ஊ ஊ எ எ ஏ ஏ ஐ ஒ ஒ ஓ ஓ



இம்மாதிரி தமிழ் எழுத்துக்களும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேசுகளும் பூக்களும் உள்பட 450 ரப்பர் எழுத்துகள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைப்புட்டி 1, பிரஷ் 1, சிராவணம் 1, மை ஊற்றிய செல்ப் இங்கிபாட் 1, ஒரு லைன் டைப் ஹோல்டர் 1, ஆகமொத்தம் சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5 செட் 1-க்கு விலை ரூ 5—8—0 மேல்கண்ட தமிழ் ரப்பர்எழுத்துப்பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'குடி அரசு' பத்திரிகையில் கண்டதாக எழுதினால் **A B C D E** இம்மாதிரியான இங்கிலீஷ் எழுத்துக்களும். நம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனாமாக அனுப்பப்படும்- (மேற்படி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் விலை ரூ 1—6—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு

(V100) எமது விலாசம்:— அ, ராஜு பிள்ளை அண்டு பிரதர்,

இந்தியா ரப்பர் எழுத்துத்தொழிற்சாலை, 54, பஜார்ரோட், சூளை மதராஸ்.

---

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.


நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டப்பாவினில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

---

கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$X$2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.